35 4 33

. No. M. 2569

# ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

மலர் 9

செந்தமிழ் மாத சஞ்சிகை

இதழ் 9

# HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1357, றஜப் மீ

1938ஷு செப்டம்பர்மீ


1. திருகுர் ஆன் ... 243
2. அல்ஹதீது ... 245
3. நமது டெபுடேஷன் ... 247
4. இஸ்லாமும் விபசார விலக்கும் ... 249
5. ஜங்கீஸ்கான் சரிதை வரலாறு ... 260
6. காங்கிரஸும் பூர்ண சுயராஜ்யமும் ... 263
7. பர்மா கலகம் ... 250
8. ஹிபாஜத்துல் இஸ்லாம் ஸிலோன் டெபுடேஷன் அறிக்கை ... 252
9. தா. இ. ஹாபிஜின் கபட சூக்ஷி ... 267
10. மேஞட்டு யாத்திரையின் பயன் ... 270


சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA.

# ஹிபாஜத்துல் இஸ்லாம்

### சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| இந்தியா, ஸிலோன், பர்மா முதலிய உள் நாடுகளுக்கு ... | ரூபா | 3 0 0 |
| பிணங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு | ” | 4 0 0 |
| தனிப் பிரதி ... | ” | 0 4 0 |

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

### நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்வலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

“ஹிபாஜத்துல் இஸ்லாம்” ஆபீஸ்,

43, போஸ்டாபீஸ் தெரு,

**G. T.,** மதராஸ்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
218943
OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
19 SEP 1938

حفاظة الاسلام

# ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். (குர்ஆன்

ஆசிரியர் :—மௌலவி A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

| | | |
|---|---|---|
| மலர் 9 | ஹிஜ்ரி 1357 றஜப் மீ<br>1938ஹு செப்டம்பர் மீ | இதழ் 9 |

## திரு குர்ஆன்

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமான அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (இதனை ஆரம்பிக்கிறேன்.)

அலிப், லாம், மீம், ஜனங்கள்— அவர்கள் சோதிக்கப்படாமலிருக்கிற நிலைமையில்—"நாங்கள் ஈமான் கொண்டோம்" என்று சொல்லிக்கொள்ள விடப்படுவோர்கள் என்று எண்ணிக் கொண்டார்களா?

(அல்குர் ஆன்)

இவ்விரு ஆயத்துகளில் முதலாவதுள்ள ஆயத்திற்கு நாம் மொழி பெயர்ப்புச் செய்யாமல், அறபி அக்ஷரங்களின் பெயர்களையே குறிப்பிட்டுள்ளோம். ஏனெனில், திருகுர் ஆனிலுள்ள சில அத்தியாயங்களின் ஆரம்பத்தில் முதலாவது ஆயத்தாக இந்த அக்ஷரங்களும், வேறு பல அக்ஷரங்களும் கூறப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு அர்த்தமும், பொருளும், கருத்தும் இல்லாமலில்லை. ஆனால் திருகுர் ஆனுக்கு ஹதீதுகளே வியாக்யானமாக இருப்பதாலும், இந்த அக்ஷரங்களுக்கு இன்னவைதான் அர்த்தம் என்று எம்பிரான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பகிரங்கமாக கூறாததாலும், நாம் அவ்வக்ஷரங்களுக்கு அர்த்தம் எழுதக்கூடிய நிலைமையிலில்லை, என்றாலும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது முகதரிசன பாக்கியத்தைப் பெற்று, அவர்களுடன் அளவளாவிப் பேசச் சந்தர்ப்பம் பெற்ற சில முக்கிய ஸஹாபிகள் இந்த அக்ஷரங்களுக்குச் சில கருத்துரைகள் மட்டிலும் கூறி இருக்கிறார்கள். ஆயினும், இவைகளெல்லாம், அவைகளுக்கு அர்த்தங்களன்று. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களும், அவர்களது அருமை ஸஹாபிகளும் பகிரங்கமாகப் பொருள்கூறாத இவ்வித அக்ஷரங்களுக்கு உம்மத்துமார்களாகிய நாம் பொருள்கூறுவது கூடாது. அவ்வாறு தமது சுய யுக்தியால் பொருள்கூறுவது குற்றமுமாகும். தவிரவும், "தனது சொந்த அபிப்பிராயத்தினால், திருகுர் ஆனுக்கு வியாக்யானம் செய்பவர் தனக்குரிய இருப்பிடத்தை நரகினில் எடுத்துக்கொள்ளட்

டும்" என்பனபோன்ற ஹதீதுகளில் கூறப்பட்டுள்ள விலக்குகளைக் கவனித்து, நாம் அவைகளுக்கு பொருள்கூறாமலே விட்டு விடுகிறோம்.

இனி, இரண்டாவது ஆயத்தைக் கவனிப்போம்:—அவர்கள் சோதிக்கப்படாமல் இருக்கிற நிலைமையில் நாங்கள் ஈமான் கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ள விடப்படுவார்கள் என்று ஜனங்கள் எண்ணிக்கொண்டார்களா என்ற வசனத்திலிருந்து, ஒருவர் தன்னை மூமின் என்று கூறிக்கொள்ள உரிமை பாராட்டுவதற்கு முன், பல பரீக்ஷைகளிற் தேரவேண்டியதிருக்கிறது என்பது புலனாகின்றது. சாதாரணமாக இக்காலத்தில், இப் புறவுலகில், லௌகீக அரசாங்கங்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஸ்கூல்களில், கல்லூரிகளில் படித்தவர்கள் தங்களை B.A., M.A. பட்டதாரிகளென்று சொல்லிக்கொள்ள முடியாது. பத்துப் பதினைந்து வருஷகாலம் கல்லூரி வகுப்புக்களில் முறைப்படி பயின்று, அக் கல்லூரி அதிகாரிகளால் ஏற்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களுக்குட்பட்டு, பரீக்ஷைகளிற்தேர்ந்தால் அக் கல்லூரியின் அதிகாரிகள் பரீக்ஷையிற்தேறியவர்களுக்கு இப் பட்டங்களைக் கொடுக்கின்றனர். இப் பட்டங்களை அவர்கள் கொடுத்த பிறகுதான், அவைகளை அடைந்தவர்கள் தங்களை M. A., என்றோ B. A., என்றோ தங்களுக்குக் கிடைத்த பட்டங்களைச் சொல்லிக்கொள்ள உரிமை பெற்றிருக்கிறார்கள். இதுபோலவே, ஆத்மார்த்த அரசாங்கத்தில், வைதீக அரசாங்கத்தில், அவ்வரசாங்கம் நிர்ணயித்துள்ள பட்டங்களை, அவ்வரசாங்க சட்டத்திற்குட்பட்டு, பரிக்ஷையிற் தேராமல் தங்களுக்குச் சூட்டிக் கொள்ளல் கூடாது. அவ்வாறு சூட்டிக்கொள்பவர் அவ்வரசாங்கத்தின் சட்டத்திற்கு மீறியவர்களாகின்றனர். இவர்களுக்கு அவ்வரசாங்கத்தின் தண்டனை கிடைக்கும். ஆனால், அந்தத் தண்டனை இவ்வுலகிலேயே கிடைத்து விடுமா? அல்லது அவ்வுலகில்தான் கிடைக்குமா? இரு உலகிலும் கிடைக்குமா என்பதைத் திர்க்கமாகக் கூறுவதற்கில்லை. ஏனெனில், அவ்வரசாங்கத்தின் அதிபதியும், உரிமையாளனும், எஜமானனுமான அல்லாஹுத ஆலா அத்தண்டனையை தனக்கு இஷ்டம் போல் நிறைவேற்றுவான்.

எவ்வாறாயினும் தன்னை ஒருவர் "மூமின்" என்று சொல்லிக்கொள்ள உரிமை பாராட்டுவதாயின், அவர் பல பரீக்ஷைகளைக் கடந்து செல்ல வேண்டும் என்பது மட்டிலும் உறுதி. இந்தப் பரீக்ஷைகள் யாவை என்பது இந்த ஆயத்தில் விவரிக்கப்படவில்லை. என்றாலும், இவைகளைக் குறித்து வேறு பல ஆயத்துகளும், ஹதீதுகளும் தெளிவாகக் கூறி இருக்கின்றன. "உங்களில் ஒருவரும் (உண்மை மூமினாகமாட்டார்—அவரிடத்தில் அவரது பொருளைப் பார்க்கினும், அவரது சந்ததியைப் பார்க்கினும், அவரது பிதாவைப் பார்க்கினும், இன்னும் அவரைப்பார்க்கினும் நான் அதிகப் பிரியமானவராக இல்லாதிருப்பின்" என்பதாக வந்துள்ள ஹதீதும் இப்பரீக்ஷையை விவரிப்பனவற்றில் ஒன்றாகும். தன்னையும், தன் பெற்றோரையும், தன் குடும்பத்தினரையும், தனது பொருளையும் பார்க்கினும் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை அதிகமாக நேசித்து, அவர்களது கட்டளையை நிறைவேற்றுவதற்காக இவைகளை அற்பணம் செய்யத் தயாராக இல்லாத வரையில் தன்னை உண்மை மூமின் என்று சொல்லிக்கொள்ள முடியாது என்பது இந்த ஹதீதின் கருத்தாகும். அதாவது, நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்காக தன்னையும், தனக்குரிய யாவற்றையும் தியாகம் செய்யல் வேண்டும். முற்காலத்தில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களது தோழர்களாக இருந்த ஸஹாபிகளது வாழ்க்கை முறைகளைக் கவனமாய்ப் படித்தோர், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள்பால் ஸஹாபிகளுக்கு எவ்வளவு அன்பிருந்தது என்பதை நன்குணர்வர். இவ்வன்பின் காரணமாகத்தான் ஸஹாபிகள், காபிர்களாக இருந்த தங்கள் மைந்தர்களையும், பெற்றோரையும், சகோதரர்களையும், மைத்துனர்களையும், மாமனார்களையும், மற்றுமுள்ள சுற்றத்தார்களையும் எதிர்த்து பத்று, உஹத் முதலிய ஸ்தலங்களில் நடைபெற்ற யுத்தங்களில் போர் புரிந்தனர். சில போர்களில் தங்கள் இனத்தார்களை வெட்டி வீழ்த்தினர். அல்லது வெட்டுண்டு ஷஹீதானார்கள். ஒரு முறை ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (றலி.) அவர்கள் இந்தப் போரில் பகைவரை எதிர்த்து யுத்தம் செய்து கொண்டிருக்கையில், காபிராக அப்பொழுதிருந்த அவரது புதல்வருக்குப் பக்கத்தில் வந்தார்களாம். அதுபொழுது ஹஸ்ரத் அவர்களை வெட்டி வீழ்த்த விரும்பி இருந்தால், அவர்களது புதல்வர் மிகச் சுலபமாக வெட்டி வீழ்த்தி இருக்கலாம். ஆனாலும், தந்தை என்ற வாஞ்சையால், அவர் அவ்வாறு

செல்யாமலிருந்து விட்டார். அப்புறம் அவர் இஸ்லாம் மதத்தைத் தழுவி முஸ்லிமாகி விட்ட பின்னர், தமது தந்தையிடம் இவ்விபரத்தைக் கூறியபோது, ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (றலி) அவர்கள் தமது மைந்தரை நோக்கி, "அந்தப் போரில் நானுன்னைப் பார்க்கவில்லை; எனக்கு இம்மாதிரியான வசதி கிடைத்திருந்தால், அந்த இடத்திலேயே உன்னைக் கொன்றிருப்பேன்" என்று பதில் கூறினார்கள் என்பதாக ஹதீதுகளில் வந்திருக்கிறது. ஹஜ்ரத் ஸீத்திக் (றலி) அவர்கள் மட்டிலும் தான் இவ்விதமிருந்தார்கள் என்றில்லை. எல்லா ஸஹாபிகளுமே இப்படித்தானிருந்தார்கள். ஒரு முறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம் பிராட்டிமார்களை விட்டு சில நாட்கள் தனித்திருந்த போது ஹஜ்ரத் உமர் பாறாக் (றலி) அவர்கள் நாயகம் (ஸல்) அவர்களது வாசஸ்தலஞ் சென்று "அல்லாஹ்வின் றஸூலே, தாங்கள் உத்தரவு கொடுங்கள், எனது புதல்வியின் தலையை (நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கைத் துணை நல்லாரான உம்முல்மூமினீன் ஹஜ்றத் ஹப்ஸா (றலி) அவர்களைக் குறித்து) வாங்கி வருகிறேன்" என்று கூறினார்களாம். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மன வருத்தம் அடையக்கூடிய முறையில் தமது செல்வப் புதல்வியார் நடந்துகொண்டார் என்பது ஹஜ்றத் உமர் பாறாக் (றலி) அவர்களது அபிப்பிராயம். தமது புதல்வி செய்த அக் குற்றத்திற்காக தாமே தமது புதல்வியின் தலையைக் கொய்ய முன் வந்தார்கள் என்பது இந்த ஹதீதிலிருந்து வெளியாகிறது. இதுமட்டுமா? உஹதில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பகைவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒழித்துவிட வேண்டுமென்றெண்ணி, அவர்களையே குறியாக வைத்து அம்பைச் சரமாரியாகப் பொழிந்தனர். அது போழ்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்மீது அம்பு படலாகாது என்பதற்காக ஸஹாபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்தடுப்பாக இருந்து, பகைவர்கள் பிரயோகிக்கும் அம்புகளைத் தங்களுடலங்களில் தாங்கிக்கொண்டார்கள்.

ஒரு முறை காபிர்கள் சூழ்ச்சி செய்து ஹஜ்றத் ஜைது (றலி) அவர்களைக் கைது செய்து திருமக்காவிற்கனுப்பி விட்டனர். அங்கு அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அத் தண்டனையை நிறைவேற்றுவதற்கு முன் காபிர்கள் அவரை நோக்கி உமது அபிப்பிராயத்தை ஒளிக்காமல் சொல்ல வேண்டும்; நீர் மரிக்கப் போகிறீர்; இச்சமயத்தில் உமக்கு பதிலாக முஹம்மது அகப்பட்டுக்கொள்வதையும், நீர் தப்பிக்கொள்வதையும் விரும்புவீரா? என்றனராம். அதற்கு அவர் நான் உயிர் தப்பித்துக்கொள்வதற்காக எனது குருநாதர் முஹம்மது (ஸல்) அவர்களது உடம்பில் ஒரு முள் தைப்பதைக்கூட விரும்பேன்" என்று பதிற் கூறினாராம். இவ்விதமாக, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக ஸஹாபிகள் தங்கள் திரவியங்களையும், தங்கள் உயிர்களையும் தங்கள் பந்துமித்திரர் யாவரையும் தத்தம் செய்திருந்தனர். ஒரு முறை ஹஜ்றத் உமர் பாறாக் (றலி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து "அல்லாஹ்வின் தூதரே, நான் தங்களிடம் ஒளிக்காமல் உண்மை விஷயத்தைக் கூற வேண்டி இருக்கிறது. தங்களுக்காக நான் எனது பொருள்களையும் சுற்றத்தாரையும் மனைவி மக்களையும் தியாகம் செய்ய முடியும். அவைகளைப் பார்க்கினும் தங்கள் மீதுதான் எனக்கு அதிகப் பிரியமிருக்கிறது. ஆனால், என்மீது எனக்கு அதிகப் பிரியமிருக்கிறது, தங்களுக்காக என்னைத் தியாகம் செய்யும் நிலைமையில் நான் இப்பொழுதில்லை என்றார்களாம். அது பொழுது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரது நெஞ்சில் தங்களது திருக்கரத்தை வைத்துத் தடவி "இப்பொழுது எப்படி" என்றார்களாம். அப்பொழுது அவர் "இப்பொழுது நான் என்னை அதிகம் நேசிக்கவில்லை, என்னைப் பார்க்கினும் தங்களையே அதிகம் நேசிக்கிறேன்." என்று கூறினார்களாம். இவை ஸஹாபிகளது நிலைமையைப் பற்றிய விபரம். இவ்வித நிலைமையில் அவர்கள் இருந்ததால்தான் இம்மை மறுமை இரண்டிலும் மேன்மக்களாயினர். ஆனால், இக் காலத்திலோ, நம்மவர் தங்களை "மூமின்" என்று கூறிக்கொள்ளக் கொஞ்சமும் சங்கோஜப்படுகின்றனரில்லை. ஒருவரைக்குறித்து பாஸிக் என்றோ, பிதுஅத்துக்காரர் என்றோ கூறிவிட்டால், உடனே வானம்இடிந்து தலையில்விழுந்துவிடும்; பிரமாதமான கக்ஷி போராட்டம் வந்துவிடும்; கோர்ட்டு வழக்குகளும்கூடச் சிலசமயங்களில் உண்டாகி விடுகின்றது. ஆனால், உண்மையில், வாஸ்தவத்தில், நன்கு கோட்டமிட்டுப் பார்த்தால் உண்மை மூமினுக்கிருக்கவேண்டிய இலக்ஷணங்கள் பலவற்றில் ஒன்றுகூடப் பூரணமாக இருக்கமாட்டாது. இறைவனது அரசாங்

கத்தில் மிகவும் சிறிய பட்டம் "மூமின்" என்பது. இப்பட்டத்திற்குரிய பரீக்ஷையிற்றேறாமல், சுயநலமும், தற்புகழ்ச்சியும் குடிகொண்டு மக்களை எவ்விதத்தாலும் ஏமாற்றி பணம் சேர்த்து விழுங்கி வருகிறவர்கள் உண்மை மூமின்களது அந்தஸ்திற்கு வருவதெங்ஙனம்? இவ்வாறான சுயநலவாதிகள் இஸ்லாமிய சன்மார்க்கத்தை இனியில்லாவண்ணம் எடுத்தியம்புவதாகக் கூறிக்கொண்டு தொழுகை, நோன்பு, ஜக்காத் முதலியவைகளைக்கூட நிறைவேற்றாமல் தங்களை மார்க்கத் தலைவர்களென்றும், வழிகாட்டிகளென்றும் கூறி வாதாடுகின்றனர். இறைவன் கிருபையால், நமது தமிழ்நாட்டில் தோன்றிய அத்தகைய உணர்ச்சி அடக்கப்பட்டதென்றாலும், அதனை வேருடன் களைய இன்னும் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. ஆதலால், இச்சுய நலக் கூட்டத்தினர் எப்பொழுதாவது எங்கேயாவது வெளிக்கிளம்புவராயின் நமது முஸ்லிம் சகோதரர்கள் அவர்களை "உண்மை மூமின்கள்தானா" என்று முதலில் சோதித்துப் பார்ப்பதவசியம். அவர்களை உண்மை மூமின் என்றறிந்து கொள்வதற்கு குறைந்த பக்ஷம் மேலே கூறப்பட்ட வியாக்யானத்தில் கண்டுள்ள அந்த ஒரு பரீக்ஷையிலாவது தேறிஇருக்கிறார்களா? என்பதைச் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். சுய நலக்கூட்டத்தார் வெகு சமர்த்தாக திரு குர்ஆனுக்கும், ஹதீதுக்கும் தங்கள் சுய அபிப்பிராயங்களைக்கொண்டு வியாக்யானம் செய்வர். ஆகவே, திருகுர்ஆன், ஹதீது ஷரீபுகளின் சிறிய பெரிய கட்டளைக்கு முற்றும் கட்டுப்பட்டு நடப்பவர்தான் மூமின்களாக இருக்க முடியும். இவர்கள்தான் ஆண்டவனின் பரீக்ஷையிற்றேற முடியும்.

தவிர, இக்காலத்தில் நல்லோர்களாக, சத்தியவான்களாகக் கருதப்படுபவர்கள் தரித்திரத்தாலும், நோயாலும் அவதிப்பட்டு, மற்றோரால் மதிக்கப்படாமலிருப்பதையும், சில துஷ்டர்கள் செல்வம், செல்வாக்கு, முதலியவைகளை அனுபவிப்பதையும் நாம் காண்கின்றோம். சில அறிவிலிகள் இதனைச்சோதனை என்றுகருதுவதில்லை. அல்லாஹுதஆலாவின் கருணைக்கு ஆளாகாமல், அவனது கோபத்திற்கு ஆளாகி இருப்பதாலேயே அவர்கள் தரித்திரர்களாயும், நித்திய நோயாளிகளாகவும், பல சங்கடங்களுக்குள்ளாகவும் இருக்கின்றனர் என்று கருதி நல்லோர்களை மதிக்காமலும், செல்வமும் மதிப்புமுள்ளவர்கள் ஆண்டவனுக்குகந்தவர்கள், அவர்கள் புரியும் செய்கைகள், அவனுக்குத் திருப்தியானவை என்றும் கருதி, துஷ்டர்களின் துஷ்டத்தனத்தைப் போற்ற வாரம்பித்து விடுகின்றனர். இவ்வாறு கருதுவது மதிமயக்கமேயாகும். ஒருவன் ஆண்டவனுக்குகந்தவனாக இருக்கிறானா, இல்லையா வென்பதற்கு செல்வமும், தரித்திரமும், தேகசௌக்கியமும், நோயும் உறைகற்களல்ல. இவைகள் உறைகற்களாக இருந்திருக்குமாயின், நபிமார்களும் வலிமார்களும் இவ்வுலகில் ஏழைகளாகவோ, நோயாளிகளாகவோ, இன்னும் பல சங்கடங்களுக்குட்படுத்தப்பட்டோ இருக்கமாட்டார்கள்.

ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் இவ்வுலகில் குடி இருப்பதற்குச் சொந்தமான ஒரு வீடு கூட இல்லாமல் இருந்தார்கள். ஹஜ்ரத் அய்யூப் (அலை.) அவர்கள் மிக கடுமையான நோய்க்குட்பட்டிருந்தார்கள். நமது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் பிறந்த ஊராகிய திரு மக்காவைவிட்டு மதீனா முனவ்வறாவிற்குச் சென்று வசிக்கும்படியான சந்தர்ப்பமேற்பட்டது. ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் பிறந்த ஊரார் அனைவராலும் அவமதிக்கப்பட்டு, அவ்விடத்தை விட்டு வெளியேறி, எகிப்து முதலிய நாடுகளெல்லாம் செல்ல வேண்டிய தேற்பட்டது. இவர்கள் யாவரும் நபிமார்கள்; அல்லாஹுதஆலாவிற்கு மிக உகந்தவர்கள். இவர்களடைந்த கஷ்டங்களைக் கருதி இவர்களுக்கு இறைவனின் கிருபை கிடைக்கவில்லை என்று கூற ஒருவரும் துணியார். நிற்க, நம்றூத், பிர்அவ்ன் ஆகியவர்கள் சக்கிரவர்த்திகளாக இருந்தனர். காரூன் போன்றவர்கள் செல்வத்தில் சிறந்தவர்கள். இவர்களுக்குப் பணமும் செல்வாக்கும், அதிகாரமும் இருந்ததைக் கருதி இவர்கள்மீது இறைவனுக்குச் சம்பூரண அன்பும் கிருபையுமிருந்தது என்று ஒருவரும் கூற முடியாது. இவ்வுலகத்தைய செல்வமும், செல்வாக்கும், கௌரவமும் அல்லாஹுதஆலாவினிடம்மதிக்கத்தக்கதாக இருக்குமாயின், அவைகளைத் தனக்குப் பிரியமான அடியாருக்கல்லாமல் வேறு யாருக்கும் கொடுக்க மாட்டான் என்பதாகப் பெரியோர்கள் கூறி இருக்கின்றனர். ஆதலால், ஆண்டவன் கொடுத்தும் சோதிப்பான், கெடுத்தும் சோதிப்பான். இச்சோதனைகளிலெல்லாம், நாம் அவனது சன்மார்க்க நெறி வழுவாதிருந்து, வெற்றி பெறுவோமாயின் "உண்மை மூமின்"களாவோம். மறு உலகப் பேற்றை யடைவோம்.

# அல் ஹதீது

(எனக்குப் பின்னர் அநேக) ஜனங்கள் தங்களது மஸ்ஜிதுகளை அலங்கரித்துக் கட்டுவார்கள். அவைகளின் மினரா (=ஸ்தூபி)களை உயர்த்துவார்கள். இன்னும் அவர்களது ஸ்தூலங்களை (கொழுக்க) வளர்ப்பார்கள். ஆனால், தங்களது ஹிருதயங்களை (உயிரற்ற) சவமாக்குவார்கள். ஆஹா! இவர்கள் தங்களது சன்மார்க்கத்தை எவ்வாறு பாழாக்கி விட்டனர்.

சோதரீர், இந்த ஹதீதில் நான்கு விஷயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. 1. மஸ்ஜிதுகளை அலங்காரமாகக் கட்டுதல், 2. மஸ்ஜிதுகளின் ஸ்தூபிகளை அதாவது மினராக்களை மிக உயரத்திற்கு வளர்த்திக் கட்டுதல், 3. ஸ்தூலத்தை நன்கு வளர்த்துப் புஷ்டியாக்குதல், 4. தங்களது ஹிருதயங்களை செத்த சவமாக்குதல். இந்நான்கு விஷயங்களில் முதல் மூன்று விஷயங்கள் ஆக்ஷேபகரமானவைகளல்ல. நான்காவது விஷயம்தான் ஆக்ஷேபகரமானது. இதனைக்குறித்துத்தான் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் நமக்கு எச்சரிக்கை செய்திருக்கின்றார்கள்.

மஸ்ஜிது கட்டும் விஷயத்தில் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு அதிக சிரத்தை இருந்த விபரம் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. நுபுவ்வத்து வருவதற்கு முன்னதாகவே, கஃபா ஷரீபைக் கட்டும் விஷயத்தில் மக்கா வாசிகளுடன் கலந்து கொண்டிருக்கிறார்கள். ஹிஜ்றத்துச் செய்து மதீனாவிற்கு வந்தபோது மஸ்ஜிது கட்டுவதை முக்கியமாகக் கவனித்தார்கள். மேலும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இக்குவலயத்தில் செய்து வந்த வேலை அடியார்களை ஆண்டவன் பக்கல் திருப்புவதே. மஸ்ஜிதுகள் இதற்கு முக்கிய அவசியமாக இருப்பதால், அதனை ஆக்ஷேபிக்க நியாயமே இல்லை. தவிரவும், மஸ்ஜிதுகளை அலங்கரிப்பதையும் நாயகம் (ஸல்.) அவர்கள் மறுத்திருக்க முடியாது. அப்படி மறுத்திருந்தால் குலபாயெ ராஷிதீன்கள் காலத்தில் மஸ்ஜிது நபவிய்யும், கஃபாஷரீபுள்ள மஸ்ஜிதுல் ஹறாமும் விஸ்தரித்து அலங்காரமாகக் கட்டப்பட்டிருக்க முடியாது. தவிரவும், ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்களுக்கு "மஸ்ஜிது, மின்பர், மிஹ்றாப் ஆகியவைகளை அலங்கரிப்பவர்" என்ற சிறப்புப் பெயர் வந்திருக்காது. ஹஜ்றத் உதுமான் (றலி.) அவர்கள் கலீபாவாக இருந்தபோது ஆயிரக்கணக்கில் மஸ்ஜிதுகள் கட்டப்பட்டன. ஆதலால், மஸ்ஜிதுகள் கட்டுவதையோ, அதனை அலங்கரிப்பதையோ இந்த ஹதீது ஆக்ஷேபிக்கவில்லை.

மினராவின் விஷயமும் இதுபோல்தான். மினராக்களை உயர்த்திக் கட்டுவது ஒருவிதத்தில் அவசியமாகும். வெளியிலிருந்துவரும் முஸ்லிம் பிரயாணிகள் மினராவைப் பார்த்து மஸ்ஜிதுகளுக்கு மிகச் சுலபமாக வருவார்கள். திக்கற்றவர்களும், ஏழை எளியார்களாகவுள்ள பரதேசிகளும் மினராவை அடையாளங் கண்டு மஸ்ஜிதுகளுக்கு வந்துசேரவும், அங்குள்ள முஸ்லிம் சகோதரர்களுடன் சேர்ந்து தங்களுக்கு வேண்டிய வசதிகளைத்தேடிக் கொள்ளவும் சௌக்கியமாக இருக்கும். மஸ்ஜிதுகளுக்கு மினரா இல்லாதிருந்தால், வெளியூரார்கள் இஸ்லாம் மதவிரோதிகள் கையில் சுலபமாகச் சிக்கிக்கொள்ள அதிக ஹேதுவுண்டு. தவிரவும், பல மதத்தினரும் வாழும் ஊர்களில் முஸ்லிம்களது மஸ்ஜிதுகளும், அவைகளிலுள்ள மினராக்களும் இருக்கிற அலங்காரத்தைப் பார்த்தாலே அந்த ஊரிலுள்ள முஸ்லிம்களுக்குள்ள செல்வாக்கையும், அந்தஸ்தையும் தெரிந்து கொள்ளலாம். முஸ்லிம்களின் மார்க்க பக்தியை அந்நிய மதத்தினர் கண்டு கொள்ள இதுவொரு சின்னமாகவுமிருக்கிறது. மேலும், உயரத்திலிருந்து பாங்கு சொல்வதால் அதிக தூரத்திற்கு அதன் சப்தம் கேட்கும். ஆதலால், பாங்கு சொல்வதற்காக மஸ்ஜிதுகளில் உயரமான மினராக்கள் இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது.

மனிதர்கள் தங்களைப் புஷ்டியுள்ளவர்களாக்கிக்கொள்வதில் குற்றமொன்றுமில்லை. ஒருவிதத்தில் அப்படிச்செய்வது அவசியமுமாகும். பற்பல மதத்தினரும், இஸ்லாம் மதவிரோதிகளும் வாழும் ஊர்களிலுள்ளவர்கள் நன்றாக

உண்டு, பலமடைந்து, சுறுசுறுப்பாகவும், யுத்தமுறைகளை அறிந்தவர்களாகவும் இருக்க வேண்டியது அவசியம். முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் சன்மார்க்க இஸ்லாமின் சிப்பாய்களாதலின் அம்மதத்தைக் காப்பதற்கு யுத்தஞ் செய்யவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின், உடனே அதற்குத் தயாராக இருக்க வேண்டியது முஸ்லிம்களின் கடமை. ஆதலால், ஸ்தூலத்தை வளர்த்துக் கொழுக்கச் செய்வது குற்றமில்லாதிருப்பதுடன் ஒருவிதத்தில் அவசியமாகவுமிருக்கிறது. இமாம் கஸ்ஸாலீ (றஹ்.) போன்ற ஞானிகளும்கூட இதனை விட்டுவிடவில்லை. நன்றாகத் தொழலாம், நன்றாக நோன்பு நோற்கலாம் என்பனபோன்ற நிய்யத்தின் பேரில் உடலை வளர்த்தால், இப்படி வளர்ப்பதற்கும்கூட தவாபு உண்டு என்றும், மிருக உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு உடலை வளர்ப்பதுதான் கூடாது என்றும் கூறி இருக்கிறார்கள். ஆதலால் இதுவும் குற்றமல்ல.

ஆனால், மனிதர்கள் தங்களது இருதயங்களை மரிக்கச் செய்வதுதான் பெருந்தவறாகும். இருதயத்திற்கு ஜீவனை அளிப்பது "ஈமான்". நாயகம் (ஸல்.) அவர்களும், ஏனைய நபிமார்களும் இருதயத்திற்கு ஜீவனையூட்டி மக்களை ஜீவிக்கச் செய்வதற்காகவே இவ்வுலகில் அரும்பாடு பட்டிருக்கிறார்கள். மரித்துப்போன இருதயங்களுள்ளவர்களில் அதாவது ஈமானில்லாதவர்களில் ஈமான் என்னும் ஜீவசக்தியை யூட்டுவதற்காக நபிமார்கள் பட்ட பாடுகளையும், அடைந்த கஷ்டங்களையும் நினைத்தால் அம்மம்ம! உடல் நடுங்குகிறது, மயிர் கூச்செறிகின்றது. நபிமார்கள் இவ்வொரு காரியத்திற்காகவே தங்களது வாணாள் முழுதையும் அற்பணம் செய்திருக்கிறார்கள். ஆதலால், மேற்கண்ட மூன்று காரியங்களையும் செய்வதுடன், நான்காவது காரியமாகிய ஈமானையும் விட்டுவிடக்கூடாது என்பது இந்த ஹதீதின் முக்கிய நோக்கமாகும். ஈமான் இல்லாமல் இம்மூன்று காரியங்களையும் செய்வதில் உண்மையான பிரயோஜனம் எதுவுமில்லை. இது யானை தின்ற விளாம்பழத்திற்கொப்பாகவே இருக்கும். ஆதலால், நம்மவர் இந்த ஹதீதில் கூறப்பட்டிருப்பதற்கேற்ப, முதலாவதாக ஈமானைக் கடைப்பிடிக்க வேண்டும். ஈமானைப் பலப்படுத்தி விட்டபின், இத்தியாதி காரியங்களைச் செய்வதில் யாதொரு குற்றமுமில்லை. ஈமான் பலப்பட்டாலே ஏனைய மூன்று காரியங்களும் தானாக உண்டாகிவிடும். ஆனால், நம்மிற் பலர் மஸ்ஜிது கட்டுவதிலும், ஸ்தூலத்தை வளர்ப்பதிலுங்கூட முன்னணியில் நிற்கின்றனர். ஆனால், தொழுகை, நோன்பு போன்ற கடமைகளை நிறைவேற்றும் விஷயத்தில் பின்னணியிலேயே இருக்கின்றனர். சிற்சில ஊர்களில் மஸ்ஜிதுகள் மிக அலங்காரமாகக் கட்டப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால், அங்கு இமாம் ஜமாஅத்தாகத் தொழுகை நடைபெறுவது கூட மிக அபூர்வமாக இருக்கிறது. ஆகவே, மஸ்ஜிதைக் கட்டுங்கள், அதனை அலங்கரியுங்கள், மினாராக்களைக் கட்டுங்கள், அவைகளை உயர்த்துங்கள், ஸ்தூலத்தை வளருங்கள், அதனைக் கொழுக்கச் செய்யுங்கள். ஆனால் தொழுகை, நோன்பு முதலிய கடமைகளைச் செய்யத் தவறாதீர்கள். மஸ்ஜிதுகளில் குறித்த காலத்தில் இமாம் ஜமாஅத்து நடைபெறுவதும், முஸ்லிம்களில் ஆடவர் ஒவ்வொருவரும் மஸ்ஜிதுக்கு வந்து தொழுவதும், தொழுத பின் மார்க்க சம்பந்தமான மஸ்அலாக்களை ஒருவருக்கொருவர் கேட்டுத் தெரிந்து கொள்வதும், இவைகளின் மூலம் மஸ்ஜிதுகளை விர்த்தியாக்குவது அதாவது அவைகளை வளப்படுத்துவதும் தான் உண்மையில் மஸ்ஜிதுகளை அலங்கரிப்பதாகும். இதுதான் ஈமானின் சின்னமுமாகும். இது இல்லாத இருதயம் செத்த ஹிருதயமாகும்; உயிரற்றதாகும். இது இல்லாவிடில் மார்க்கமும் போச்சு, மதமும் போச்சு, எல்லாவற்றிற்கும் உயிராகவுள்ளது, ஜீவ சத்தாகவுள்ளது ஈமானே. ஈமான்தான் பிரதானம். இதனை நம் முஸ்லிம் நேயர்கள் கைக்கொண்டு நடப்பார்களாக.

ஈமான் கொள்ளுங்கள், ஈமான் கொள்ளுங்கள் என்றே திரு குர்ஆனும் நூற்றுக்கணக்கான இடங்களில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறது. ஒருவர் எவ்வளவுதான் நல்ல காரியங்களைச் செய்திருந்தாலும், அவரில் உண்மையான ஈமான் இல்லாவிட்டால், அவர் மறு உலகில் கரை சேர முடியாது. நாம் இவ்வுலகிற் செய்யும் சகல நல்ல காரியங்களும் இறைவனால் அங்கீகரிக்கப்பட்டு அவைகளுக்குத் தக்க பயன் கிடைப்பதற்கு அஸ்திவாரமாகவுள்ளது ஈமான் தான். ஆதலால், மஸ்ஜிது கட்டுவதாலும், ஜிஹாது செய்வதாலும் வேறு பல நற்காரியங்கள் செய்வதாலும் நாம் எதிர்பார்க்கும் பயன்களை ஈமானின் மூலமாகத்தான் பெறவேண்டும்.




# நமது டெபுடேஷன்

உங்கள் "ஹிபர்ஜத்துல் இஸ்லாம்" சங்க டெபுடேஷன் ஸிலோன் சென்று சுற்றுப் பிரயாணம் செய்து திரும்பிய விபரத்தை முந்திய மாசிகைகளில் முறையே பிரசுரித்து வந்துள்ளோம். டெபுடேஷன் சுற்றுப்பிரயாண ரிபோர்ட்டும், அங்கு நன்கொடையளித்த கனவான்களின் ஜாபிதாவும் இம்மாசிகையின் வேறிடத்தில் பிரசுரிக்க ப்பட்டுளது. நமது டெபுடேஷனை ஸிலோனில் வதியும் தென்னிந்திய முஸ்லிம்கள் மட்டுமின்றி வட இந்திய முஸ்லிம்களான சேட்மார்கள், ஸிலோன் முஸ்லிம்கள் ஈறாக எல்லோரும், வரவேற்று உபசரித்திருக்கின்றனர். இன்னவர்களுக்கு நமது சங்க சார்பாக மனமார்ந்த வந்தனத்தை சமர்பித்துக் கொள்கிறோம்.

நமது சங்கம் எக்காரணத்திற்காக நிறுவப்பட்டது என்பதுபற்றி நாம் மீண்டும் மீண்டும் எழுதிக் காட்ட வேண்டிய அவசியமில்லை. அது மிக மிகப் பிரபல்யமானதே. சிறிது காலமாய் நந்நாடாம் தென்னாட்டிலும், ஸிலோனிலும் காதியானிக் கொள்கை பிரகடனப்படுத்தப்பட்டு வந்ததென்பது நேயர்களறிந்ததே. அதற்காக அஹ்மதிகள் பல்லாயிரக் கணக்கான தொகைகளை தத்தம் செய்து வந்தனர்; தென்னாட்டு ஆசாமி ஒருவருக்கு மட்டும் மாதம் 200 ரூபாய் சம்பளமும், இதர உம்பளமும் அளித்து வந்தனரென்றால் எவ்வளவு தொகையை இவண் வாரி இறைத்திருக்கின்றனர் என்பது நேயர்களுக்கு நன்கு புலனாகும். தென்னாட்டுபிரசாரகர் பலதிறப்பட்டகொள்கையுடையவர். அவர் காதியானிக் கொள்கையுடன் நாஸ்தீகத்தையும் பிரசாரம் செய்வதில் பின் வாங்கினாரில்லை. இதனால் மக்கள் அநேகர் வழிகெட்டனர். ஊர்கள் தோறும், நாடுகள் முழுதிலும் அதிக குழப்பங்கள் ஏற்பட்டு விட்டது. ஆரம்பத்தில் இக் கெட்ட கொள்கையை மறுத்து ஆங்காங்குள்ள மார்க்க பக்தர்கள் தனிப்பட்ட முறையில் பிரசாரம் செய்து வந்தனர்.

பின்னர் எல்லாரும் ஒன்று சேர்ந்து ஓர் சங்கமுறையில் இக் காரியத்தைச் செய்து முடிக்க முன்வந்து சென்ற 9 வருடங்களுக்கு முன் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தை சென்னையில் நிறுவினர். பல விடங்களில் கிளைச் சங்கங்களும் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் கொளும்பு, ரங்கூன் முதலிய விடங்களில் மாபெரும் ஆதரிப்பு மஹாநாடுகளைக் கூட்டி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதோடு தலைமை பீடத்துக்கு வேண்டிய உதவியளிப்பதாக வாக்குமளிக்கப்பட்டது. அது சமயம்கொளும்பில் ஜனாப்களானஹாஜி, P. B. உம்பிச்சி, ஹாஜி பல்லாக்குலெப்பை ஆலிம், ஜிப்ரி தங்கள் இவர்கள் தலைவகித்து இக்காரியத்தை வெகு ஊக்கமாய் நடாத்திவந்தனர். ஆரம்பத்திலேயே நமது டெபுடேஷன் கொளும்பு செல்வதென்று முடிவு செய்யப்பட்டிருந்தும் அதற்குதேர்ந்தெடுக்கப்பட்டிருந்த மெம்பர்களுக்கு ஏற்பட்ட பல சோலியால் அவர்கள் ஒன்றுகூடமுடியாமல் டெபுடேஷன் புறப்படுவதில் எதிர்ப்பாராத தாம

தம் ஏற்பட்டுப் போயிற்று. சென்ற வருடத்தில் ஒருமுறை அதிக முயற்சி எடுக்கப்பட்டு தூதுவக் கூட்டத்தின் எல்லா மெம்பர்ளும் சிலோன்பயணமாய் திருச்சி வந்து சேர்ந்தார்கள். அன்றைய தினம் கொழும்பில் பிரபல வியாபாரியும் நமது கொடை வள்ளலுமான P. B. உம்பிச்சி சாஹிபவர்கள் "தாருல்பகா'' அடைந்துவிட்டார்கள் என்ற செய்தி திருச்சியில் கிடைத்தவுடன் டெபுடேஷன் பயணம் ஒத்திவைக்கப்பட்டது. இறுதியாக டெபுடேஷன் சமீபத்தில் சிலோன் சென்று திரும்பிற்று. ஆனால் நமது மௌலானுக்களும், சிலோனிலுள்ள பிரபலஸ்தர்களும் அதிகப் பிரயாசை யெடுத்தும் எதிர்பார்த்த அளவுக்கு பிரயோஜன மேற்பட வில்லை என்பது அவர்களின் ரிபோர்ட்டிலிருந்து நேயர்களுக்கு புலனுகும்.

என்ருலும், அங்கு பிரசார வேலை தக்க முறையில் நடைபெற்றுளது. அதனுல் மக்கள் அதிகப் பிரயோஜன மடைந்துள்ளனர். இதுவும் நம் டெபுடேஷன் நோக்கத்தி லொன்றேயாகும். நம் சங்கம் ஏற்பட்ட ஆரம்ப காலமுதல் அது நமது நோக்கத்தை மக்களிடை பிரசாரம் செய்வதில் கண்ணும் கருத்துமாக யிருந்து வந்திருக்கிறதென்பது உலகப் பிரசித்தம். எங்கள்மீது சுமத்தப்பட்ட இப் பிரசாரவேலை மாபெரும் "ஜிஹாதா''கும் என்பது வெளிப்படை. பேனுமுனையைக்கொண்டும், சொல் வன்மையைக்கொண்டும், பொருள் செலவைக் கொண்டும் செய்யக்கூடிய யுத்தமாகும். காதியானி இயக்கத்தையும், நாஸ்த்தீகத்தையும் துலைப்பதில் நமது மாசிகை அரும்பாடு பட்டு வருகிறது என்பதை நேயர்கள் நன்கறிவர். நமது கொள்கையை மக்களிடை பறப்புவதற்கு எழுத்துப் பிரசாரத்தோடு சத்தியப் பரசாரமும் செய்யவேண்டிய அவசியத்தையும் நம் சங்கம் உணர்ந்தது. அதற்காக "ஹிஸ்புல்லாஹ்'' என்ற ஓர் படையையும் திரட்டியது. தியாகநோக்குள்ள உலமாக்களும் கனதனவான்களும் அதில் சேர்ந்துழைத்தனர். "ஹிஸ்புல்லாஹ்'' க்கள் தஞ்சை, மதுரை, திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களிலுள்ள அவசியமான இடங்களில் முன்னேற்பாடுகளுடன் அங்கு சுற்றுப்பிரயாணம் செய்து தீவிரப் பிரசாரம் செய்தனர். அதனுல் மக்களுக்கு ஏற்பட்ட நற்பயன் இவ்வளவு, அவ்வளவு என்று எழுதி முடிக்க முடியாது. இதனுல் காதியானிப் பிரசாரமே தடைபட்டு போய் விட்டது. இக்காரணத்தால் நமது எதிரிகள், ஹிஸ்புல்லாஹ்கள்மீதும், அவர்களின் பிரசாரத்திற்கு முன் நின்று உதவி செய்தவர்கள் மீதும் வசைப் புராணங்களைப் பாடத் தொடங்கினர். இதனுல் நீதிமன்றத்தில் தாவாக்களும் ஏற்பட்டது. இதன் முடிவாக நமக்கும் நமது எதிரிக்கும் ஓர் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டது. அவ்வுடன் படிக்கைக்கு கடைசி வரை அவர் ஒத்துவரவில்லை யாயினும், காதியானிப்பிரசாரம் செய்வதிலுள்ள சங்கடங்களை யுண்ணி அப்பிரசாரத்தைக் கைவிட்டு விட்டு மீண்டும் முஸ்லிம் சமூகத்திர்க்கு விரோதமாய் காங்கிரஸ் பிரசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டார். இதனுல் ஒருவாறு காதியானி, நாஸ்தீகப் பிரசாரம் நின்றது. தேசமும், மக்களும் 'சலாமத்' பெற்றனர். 'அல்ஹம்ந்துலில்லாஹ்', இம்மஹத்தான வெற்றியை அடைவதற்கு நம் சங்கம் இப்பத்து வருட காலத்தில் இரவுப்பகலாய் வேலை செய்ய வேண்டியிருந்ததென்பதை நேயர்கள் நன்கறிவர். மெம்பர்களும், தலைவர்களும், இதர உபகாரிகளும் உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்தனர். சங்கத்தின் பொக்கிஷம் பல ஆயிரக்கணக்கான பணத்தை இதற்காகச் செலவிட்டது. நபிகள் திலகம் (ஸல்) அவர்கள்தான் இறுதி நபி, அவர்கள் போதனைதான் இறுதி நாள்வரை எடுத்து நடத்தத் தகுதியுடைய தென்பதை மக்

கள் மனதில் பதியும்படி செய்து விட்டது. தன் நோக்கத்தில் வெற்றி பெறுவதற்காக நம் சங்கம் இவ்வரும் மாசிகையை நடத்தி வருகிறது. சங்கத்தின் தூதை மூலை முடுக்குகளிலெல்லாம் இம் மாசிகை பறத்தி வருகின்றது. இதன் நோக்கம் தேசத்தில் காதியானிக் கொள்கை, நாஸ்தீகம் பரவவிடாமற் தடுக்கவேண்டு மென்பதும், மக்கள்பால் மார்க்க பக்தியை உண்டாக்கவேண்டு மென்பதும், சன்மார்க்கத்தையும், நபிபெருமான் (ஸல்.) அவர்களின் நடவடிக்கைகளையும் மக்களின் மனதிற்கு பிடித்தமான முறையில் எடுத்துக் காட்டுவதும், ஸீரத்தையும், சரித்திரக் குறிப்புகளையும் உண்மையான முறையில் எடுத்தெழுதிப் பிரசாரம் புரிவதும், சமூகத்தில் பரவியிருக்கும் அனைச்சாரங்களை அகற்றுவதும், ராஜிய தேசிய விஷயத்தில் முஸ்லிம்கள் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்பதும், முஸ்லிம்கள் மேனாட்டு நாகரீகத்தில் ஈடுபடாமல் சிக்கன வாழ்க்கை நடத்தவேண்டும் என்பதுமேயாகும். இவ்வரும் நோக்கத்திற்கு உதவிபுரிவது முஸ்லிம்களின் கடமை என்று கூறிவிடுவது மிகையாகுமா?

இவ் வரும் மாசிகையை நாம் பிரசார நோக்கங் கொண்டே நடத்தி வருகிறோம். இதனை அனேக கனவான்கள் ஆதரித்து வருகின்றனர் என்பதில் ஐயமில்லை. என்றாலும் சிலர் மார்க்க அபிமானக் குறைவால் இது விஷயத்தில் பின்வாங்குகின்றனர். அவர்கள் மனதிலும் இந் நன்நோக்கம் பதிய வேண்டும் என்பதைக் கருதி அவர்களுக்கும் பத்திரிகை அனுப்பி வந்து நோக்கம்போல் சந்தாக்களை வசூல் செய்து வருகிறோம். இது வகையில் அநேக சேதாரம் ஏற்படுகிறது. சிலர் வி. பி. அனுப்புவதையும் திரும்ப அனுப்பி விடுகின்றனர். அவ்வகையில் சங்கத்திற்கு அதிக நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இம்மாதிரி ஏற்பட்ட நஷ்டத்தை கணக்கிட்டால் பதினாயிரம் ரூபாய்க்கு நெருங்கிவிடும். அதுவிவரங்களை சமீபத்தில் வெளியிடப் போகும் சங்கத்தின் ஜெனரல் ரிபோர்ட் மூலம் தெரிந்து கொள்ளலாம். சந்தாதார்களும், கனதனவான்களும் இது விஷயங்களை யெல்லாம் நன்கு ஆலோசனை செய்து சங்கம் நீடூழி வாழ்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமாய்க் கோருகிறோம்.

இதுவரை இச் சங்கத்திற்கு உபகாரம் செய்த கனவான்கள் அநேகருளர். அதைக்கொண்டுதான் இக் காரியம் முன்னேற்றத்துடன் நடைபெற்று வந்தது. அவ்வாறு உபகாரம் செய்யாதவர்களும் அநேகருளர். அவர்கள் இந்த வேண்டுகோளை கவனிக்கும்படி கோருகிறோம்.

சங்கத்தின் முக்கிய நோக்கங்கள் தான் நிறைவேறி விட்டதே, இன்னும் இச்சங்கம் இருக்கவேண்டியது அவசியந்தானா வென்று சிலர் நினைக்கலாம். ஆனால் ஒரு தேசத்தில் அமைதி நிலவி யிருக்கிறது, களவும் நின்று விட்டது. அச் சமயமும் போலீஸ் டிபார்ட்டுமெண்டு இருக்க வேண்டியது அவசியமென்பதை எவரே மறுக்க வல்லார். அஃதேபோன்று இம் மாதிரியான இஸ்லாமிய பாதுகாவலன் ஒருவன் இருக்கவேண்டு மென்பதை நேயர்கள் உணர்வார்களாக. மேலும் சங்கம் நிறைவேற்ற வேண்டிய காரியங்கள் இன்னும் பலவுள. நமது நோக்கம் ஸ்திரமாகுவான் வேண்டி இஸ்லாமிய பல நூல்கள் வெளிபிட வேண்டி யிருக்கிறது. மேல் குறிப்பிடப்பட்ட காரியங்களை நம் சங்கம் செய்துவந்ததோடு அன்னிய மதஸ்தரின் தாக்குகளுக்கும் அவ்வப்போது மறுப்புக்கூறி வந்துளது. அந்நிய மதஸ்தரின் மத்தியிலும் இஸ்லாத்தின் நோக்கங்கள் பறவுவதற்கும் பல ஏற்பாடுகளை செய்துவந்தது. இக் காரியங்களை இனி மும்முரமாய் நடத்தவேண்டி யிருக்கிறது. இவைகள் யாவும் கனதனவான்களின் உபகாரத்தைப் பொருத்தே யிருக்கிறது. ஆகவே, நண்பர்கள் இவைகளை கவனிப்பார்களாக.

# பர்மா கலகம்

சில நாட்களுக்குமுன் பர்மாவில் இந்தியருக்கு விரோதமாகப் பெருங்கலகமேற்பட்டது. இக் கலகத்தில் இந்துமுஸ்லிம் ஆகிய சகல இந்தியரும் உயிர், பொருள் நஷ்டங்களுக்குள்ளாயினர். இக் கலகம் தோன்றியதற்கு பர்மாவிலுள்ள முஸ்லிம் ஒருவர் புத்தமத சம்பந்தமாக வெளியிட்ட ஒருபுத்தகம் காரணம் என்று வெளிக்குச் சொல்லிக் கொள்ளப்படுகிறது. ஆயினும், நடைபெற்ற சம்பவங்களைக் கவனிக்கும்போது, இக்கலகத்திற்கு மூலகாரணம் இப்புத்தகம் அல்ல, கலகத்தை ஆரம்பிப்பதற்கு இப்புத்தகத்தை ஒரு புகலாகக் கொள்ளப்பட்டிருந்தது எனதெரிகிறதேயன்றி, இப்புத்தகம்தான் இக் கலகத்திற்கு உண்மைக் காரணமென்று தோன்றவில்லை. ஏனெனில், சுமார் 10-12 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு பர்மியர் நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களைத் தாக்கி எழுதிய ஒரு புத்தகத்திற்கு மறு மொழியாக, அக்காலத்தில் இப் புத்தகம் பர்மா தேசத்து நவ்முஸ்லிம் ஒருவரால் எழுதப்பட்டது. இப்புத்தகம் அன்று முதல் இன்று வரை முதற்பதிப்பு, இரண்டாம் பதிப்பு, மூன்றாம் பதிப்பென, இப்பொழுது மூன்றாவது முறையாக அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தை பிரசுரித்ததற்காக உண்மையிலேயே பர்மாவிலுள்ள புத்தமதத்தார் வருந்தி, ஆத்திரங்கொள்வதாயின் சுமார் பத்து வருஷங்களுக்கு முன்னதாகவே இப்புத்தகத்திற்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்திருக்கலாம். அவ்வாறு ஒன்றும் நடைபெறாததைக் கவனிக்கில் இடைக்காலத்தில் ஏதோ சூழ்ச்சி நிகழ்ந்திருக்க வேண்டும் என்றே நினைக்கவேண்டியதிருக்கிறது. பர்மாவிலிருந்து தப்பி தாய்நாடு திரும்பும் தமிழர்கள் கூறும் வாக்கு மூலத்திலிருந்து, இப்புத்தகத்தை பர்மிய பொங்கிகள் கண்டிக்கின்றனர் என்பதைத் தெரிந்த முஸ்லிம்கள், முஸ்லிம்கள் சார்பாக பர்மியரிடம் மன்னிப்புக் கேட்டதாகவும் தெரிய வருகிறது. ஆகவே, புத்தகம்தான் இக்கலகத்திற்குக் காரணமாக இருந்தால், பர்மியருக்கு இதுசம்பந்தமாக நியாயமான முறையில் செய்யவேண்டிய பரிகார முறைகளை இந்திய முஸ்லிம்கள் செய்திருக்கும்போது மறுபடியும் கலகத்தை ஆரம்பிக்கவேண்டிய அவசியமில்லை. எனவே, இச் சிறு காரியத்தை மலையாக வளர்த்து, இவ்வளவு பெரும் காரியத்தைச் செய்திருப்பதைக் கவனிக்கும்போது, இந்தியர்களுக்கு விரோதமான இயக்கம் பர்மாவில் இருக்குமோவென சந்தேகங் கொள்ளாமலிருக்க முடியவில்லை. இவ்விதமான வகுப்புணர்ச்சி வளர்ந்து கொண்டு போகுமாயின், அதனால் இந்தியாவிற்கும் பர்மாவிற்கும் அநேக சங்கடங்களும் நஷ்டங்களும்தான் உண்டாகும் என்பதை நாம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

இன்று, மிகச் சிறுபான்மையினராக வயிற்றுப் பிழைப்பை உத்தேசித்து கடல் கடந்து சென்று கூலிவேலைகளையும், இதர காரியங்களையும் செய்துகொண்டிருக்கிற ஒருசிலரை பர்மியர் இரக்கமற்று, அகாரணமாய்த்தாக்கி உயிர்சேதத்தையும் பொருள் சேதத்தையும் விளைவித்துவிட்டால், அதற்குப் பரிகாரம் செய்ய இந்தியரால் முடியாது என்று அவர்கள் கருதவேண்டியதில்லை. பர்மா நாடு விவசாய நாடு. அங்கு நெல் விளைகிறது. மண்ணெண்ணெய் எடுக்கப்படுகிறது. அங்கு ஏற்றுமதி செய்யப்படுகிற அரிசி, எண்ணெய் முதலிய சாமான்களுக்கு இந்தியாதான் பெரிய மார்க்கட்டு. எனவே இந்தியா பர்மாவின் விளைபொருள்களை பகிஷ்கரிக்குமாயின், பர்மா தேசத்திலுள்ள எல்லோரும் பரதவிக்க வேண்டிய தேற்படும். இவ்வித நிலைமை ஏற்படுமாயின், சுயேச்சைக்காக, ஸ்வதந்திரத்திற்காக முயன்றுவரும் பர்மா மூன்றாவது மனிதரின் தயவை நாடி, அப்மூன்றாவது மனிதருக்கு அடிமைப்பட வேண்டிய தேற்பட்டு விடும். ஆகவே, பர்மாவில் இந்தியர் குடியேறி, பலவித தொழில்களைப் புரிகின்றனர் என்பதைப் பொறுமையாகக்கொண்டு இவ்விதக் காரியங்களைச் செய்து, அதற்குப் பதி

218963

லாக இந்தியரும் தங்கள்வலுவைக் காண்பிக்க முன்வந்தால், கிணறு வெட்டப் பூதம் வெளிப்பட்ட கதைபோலவே இதன் பலன் விளையும்.

கோடிக்கணக்கான முதல்களையும், லக்ஷக்கணக்கான ஜனங்களையும் பர்மாவிற்குக் கொடுத்துதவி அதனைச் செழிப்புறச் செய்து வந்திருக்கும் இந்தியருக்கு விரோதமான உணர்ச்சியை வளர வொட்டாமல், முளையிலேயே கிள்ளிவிடுவது பர்மியருடையவும் இந்தியருடையவும் கடமையாகும். ஆகவே, அகாரணமாய் நஷ்டத்திற்கும் கஷ்டத்திற்கும் ஆளான இந்தியருக்கு தக்க பரிகாரம் செய்ய பர்மா சர்க்காரும், பர்மியரும் முன்வந்து, இக்கலகத்திற்குக் காரணமாக இருந்தவர்களைத் தண்டித்து, இந்தியருக்கு நஷ்ட ஈடு கொடுத்து, இந்தியரின் நல்லுணர்ச்சியைத் தேடிக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

இக்கலகத்தில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் தென்னிந்தியரும், வங்காளத்து சிட்டகாங் வாசிகளுமேயாவர் இப்பொழுது இந்தியாவில் மாகாண சுயாட்சி இருந்து வருவதால், தங்கள் தங்கள் மாகாணத்தைச் சேர்ந்த பிரஜைகளுக்கு உதவிபுரிய மாகாண சர்க்கார்களுக்கு, இதற்கு முன்னிருந்ததைப் பார்க்கினும் அதிகமான பல சௌகரியங்கள் இப்பொழுதிருக்கின்றன. கடல் கடந்து, அந்நிய நாடுகள் சென்று வர்த்தகம், விவசாயம் முதலிய பலவிதத் தொழில்களைச் செய்து வரும் தங்கள் பிரஜைகளை இந்திய சர்க்காரும், மாகாண சர்க்கார்களும் காப்பாற்ற முன் வரவில்லையானால், அந்நிய நாடுகளில் வசித்துவரும் இந்தியர்கள் நிலை அதோகதியடையும். ஆதலால், இந்திய சர்க்காரும், மாகாண சர்க்கார்களும் இவ்விஷயத்தில் வேண்டுவன செய்வதில் காலங்கடத்த மாட்டார்கள் என்று நினைக்கிறோம்.

பர்மாவில் இந்தியருக்கு நேர்ந்த கஷ்டங்களைத் தெரிவித்துக்கொள்ள அங்குள்ளவர்களின் பிரதிநிதிகள் சென்னைக்கு வந்து, தற்போது அதிகாரத்திலிருந்து வரும் காங்கிரஸ் மந்திரிகளைக் கண்டு பேசிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். இதுபோல வேறு சில பிரதிநிதிகள் வங்காளத்து முதல் மந்திரியையும், காங்கிரஸ் தலைவரையும் கண்டு பேசி விட்டு, டில்லிக்கும் சென்றிருக்கின்றனர். அந்நிய நாடுகளில் வசிக்கும் இந்தியர் தங்களுக்கு நேர்ந்த கஷ்டங்களை இந்திய சர்க்காரிடம்தான் சொல்லிக்கொள்ள முடியும். குறித்த கலகத்தின் உண்மை நிலையை இந்திய சர்க்காருக்கு அறிவிப்பதற்காக பர்மா வாழ் இந்தியரின் பிரதிநிதிகள் டில்லிக்கு வந்து விட்டதால், இந்திய சர்க்கார் இவ்விஷயத்தில் அசிரத்தையாக இருக்க நியாயமில்லை. முன்னொரு சமயம் இலங்கையில் இதுபோன்றதொரு உணர்ச்சி தோன்றி, பெருங் கலகம் ஏற்பட்டபோது, அதுசமயம் இந்தியாவிலிருந்த மாகாண சர்க்கார்களும் இந்தியச் சர்க்காரும் தக்க கவனம் செலுத்தி, சரியான முறையில் பரிகாரம் செய்ததால் இலங்கையில் அப்புறம் இந்தியருக்கு ஆபத்துண்டாகவில்லை. இதுபோலவே, இனிமேல் என்றும், இவ்வித ஆபத்து உண்டாகாதவாறு பர்மியர் விஷயத்திலும் கவர்ன்மெண்டார் நடந்து கொள்ள வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்தியாவில் சுதந்திரத்திற்காக காங்கிரஸ் முயலுகின்றது என்பதாகப் பிரசாரம் புரியப்படுகிறது. காங்கிரஸ் மந்திரிமார்கள் இந்தியாவின் எழு மாகாணங்களை ஆட்சி புரிகின்றனர். மாகாண சுயாட்சியும் தற்போதிருந்துவருகிறது. இந்தியரின் அபிமானத்தையும் ஆதரவையும் இன்னும் அதிகமாக அடைவதற்கு காங்கிரஸிற்கும், காங்கிரஸ் மந்திரிகளுக்கும் இதுஒரு நல்ல சந்தர்ப்பமாகும். இச்சந்தர்ப்பத்தில் காங்கிரஸும் காங்கிரஸ் மந்திரி சபைகளும் ஒருமுகமாக இந்தியரின் நன்மையை உத்தேசித்து முயற்சி எடுத்துக்கொள்வார்களாயின் இந்திய சர்க்கார் அசிரத்தையாக இருக்கவும் முடியாது, பர்மிய சர்க்கார் தட்டிக்கழித்து விடவும் முடியாது. ஆகவே, இந்தியர்களினுடையவும், அந்நிய நாடுகளில் வாழும் இந்தியர்களினுடையவும் ஆதரவை அடைவதற்குக் கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பத்தை காங்கிரஸும் காங்கிரஸ் மந்திரி சபைகளும் அசட்டை செய்ய மாட்டாவென நம்புகிறோம்.

தவிர, அந்நிய நாடுகளில் வாழும் இந்தியர் பிரசினை கட்சிப்பிரசினையல்ல. இந்தியர் எல்லோருக்குமே பொதுவான பிரசினையாகும். ஆதலால், இந்தியாவிலுள்ள இதர ராஜ்யக்கக்ஷிகளும் ஸ்தாபனங்களும், ஏனைய மந்திரிச் சபைகளும் தங்கள் வேற்றுமைகளை விட்டொழித்து, ஒற்றுமையுடன் இதில் பங்கெடுத்துக்கொள்வார்களாக. அந்நிய நாடுகளில் வாழும் இந்தியர் விஷயத்தில் இந்தியாவிற்குள்ளுள்ள ராஜியக்கக்ஷிகளுக்குள் இரண்டபிப்பிராயம் இருக்க வேண்டியதில்லை. பர்மாவில் கஷ்டமடைந்து

சென்னைக்கு வந்த இந்தியர்களுக்கு உதவிபுரியும் விஷயத்தில் சென்னை மாகாண முஸ்லிம் லீகும், சென்னை ஜில்லா காங்கிரஸ் சபையும், சென்னைநகர போலீஸும் ஒருமனப்பட்டு ஒத்துழைத்துவருவதைப் பார்த்தால், கடல்கடந்த இந்தியர் விஷயத்தில் இந்தியாவின் ராஜியக் கக்ஷிகளுக்குள் வேற்றுமை இல்லை என்பதைக் கண்டு ஆறுதலடைகிறோம். சென்னை மாகாண முஸ்லிம் லீக் நிர்வாகிகளும் சென்னை காங்கிரஸ் தலைவர்களும், போலீஸ் உத்தியோகஸ்தர்களும் சிரத்தையுடன், கஷ்டப்பட்டு வந்து சேர்ந்த நம்மவருக்கு ஊழியம் புரிந்தமைக்கு அவர்களை நாம் பாராட்டுவதுடன், நமது மாகாண வாசிகள் இவ்விஷயத்தில் அவர்களுக்கு அதிக ஆதரவு புரிந்து உற்சாக மூட்டவேண்டுமாகக் கேட்டுக்கொள்கிறோம். இதுபோலவே இந்தியாவிலுள்ள காங்கிரஸ் மந்திரி சபைகளும், லீக் மந்திரி சபைகளும், காங்கிரஸ், முஸ்லிம் லீக் முதலிய பல ராஜீயஸ்தாபனங்களும் கக்ஷி வேற்றுமை பாராட்டாமல் ஒத்துழைத்தால் லக்ஷக்கணக்கான முதல்களைப் பறிகொடுத்தும், ஆயிரக்கணக்கில் உயிர் நஷ்டம் அடைந்தும் பரதவிக்கும் இந்தியருக்கு இந்திய சர்க்கார் தக்க உதவி புரிய முடியாமற் போகாது.

பர்மா சர்க்காருக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகிறோம். பர்மாவில் வாழும் இந்தியருக்கு பர்மியரால் ஏற்பட்ட இக்கஷ்டத்தை நிவர்த்தி செய்து, தங்கள் நாட்டில் வாழும் எத்தேசத்த வருக்கும் பாதுகாப்புக் கொடுக்க நாங்கள் தவறோம் என்பதை ருஜுச் செய்ய தக்க சந்தர்ப்பம் வாய்த்துளது. ஆகவே, இந்தியருக்கு உயிராலும் பொருளாலும் நஷ்டம் விளைவித்த குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டிப்பதுடன், இந்தியரின் நஷ்டத்திற்கும் தக்க பரிகாரம் செய்ய முன் வரவில்லையாயின், பர்மாவின்மீது ஏனைய நாட்டினருக்கு ஏற்படும் அவநம்பிக்கையால் பர்மா பெரிதும் நஷ்டமடைய நேரிடும். ஆதலால், பர்மா சர்க்காரும் தங்கள் நாட்டின் கண்ணியத்தையும், கௌரவத்தையும், நற்பெயரையும் நிலை நாட்ட இவ்விஷயத்தில் தக்கன செய்ய முன்வர வேண்டுமாகக் கேட்டுக் கொள்கிறோம்.

---

# ஹிபாஜத்துல் இஸ்லாம் ஸிலோன் டெபுடேஷன் அறிக்கை

நாங்கள் 18-3-38-ல் கொழும்பு சென்றோம். அப்பகுதிகளில் நமது ஹிபாஜத்துல் இஸ்லாம் சார்பாய் பிரசாரம் செய்யத்தொடங்கி முக்கிய பட்டணங்களிற் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டு 26-8-38-ல் இந்தியா வந்து சேர்ந்தோம். அப்பகுதிகளில் 4 மாதம் 7 நாள் சுற்றுப் பிரயாணம் செய்துள்ளோம். அங்குள்ள முஸ்லிம்கள் எங்களை வரவேற்று அளவு கடந்த உபசரணை செய்தார்கள்; ஆங்காங்கு மஹாநாடுகளைக் கூட்டி மார்க்கோபதேசம் புரிய தக்க ஏற்பாடு செய்தார்கள். இம்முறையில் 70 பிரசங்கங்கள் நிகழ்த்த சந்தர்ப்பம் கிடைத்தது. அநேக மக்கள் பிரசங்கங்கள் கேட்டு பிரயோசனமடைந்தனர். தற்சமயம் வியாபார மந்தமும், பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டிருந்தும் சனவான்கள் அவைகளை யெல்லாம் பொருட்படுத்தாது நமது சங்கத்தின் சேவையை பாராட்டுவான்வேண்டி அவரவர்களாலியன்ற நன்கொடையளித்தார்கள். நமது மாசிகை அவ்விடம் அதிகமாய்ப் பரவுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்தார்கள்.

ஒருகாலத்தில் அப்பகுதிகளில் காதியானி அஹ்மதிக் கொள்கைகள் பரவியிருந்தன. காதியானி பார்ட்டியாரின் கொள்கைகள் கொழும்பு தூதன் பத்திரிகை வாயிலாய் பிரகடனப்படுத்தப்பட்டு வந்தது. லாகூர் பார்ட்டியாரின் கொள்கைகள் சென்னை தா. இ. வால் பரத்தப்பட்டு வந்தது. சுருங்கக்கூறுமிடத்து, இவ்விரு பார்ட்டியாரின் கொள்கைகள் அங்கு ஒரு காலத்தில் சற்றே தலை தூக்கி யிருந்தது. ஒரு சில வாலிபர்களும், வயோதிகர்களும் இக் கொள்ளை நோயால் பீடிக்

கப்பட்டிருந்தனர். எனவே இதனை அகற்றுவதற்கு அங்குள்ள பெரியோர்கள் ஆலோசனைகள் செய்திருந்த சமயம் நுங்கள் ஹிபாஜத்துல் இஸ்லாம் சென்னையில் ஆரம்பிக்கப்பட்டது. இதனை ஆதரித்து கொழும்பிலும் மற்ற நாடுகளிலும் மஹாநாடுகள் நடத்தினர். அக்காலத்திலிருந்தே நமது மாசிகை அங்கு அதிகம் பரவுவதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். நமது சங்கமும், மாசிகையும் காதியாணிக்கொள்கைகளை மறுத்து தீவிரப் பிரசாரம் செய்து வந்தது. இதன் காரணத்தாலே தாருல் இஸ்லாம் தனது காதியானி பிரசாரத்தைக் கைவிட்டது. கொழும்பு தூதன் பத்திரிகையும் நின்று விட்டது. நமது மாசிகையின் பிரசாரத்தால் அந்நாட்டில் மிர்ஜா குலாம் அஹ்மதின் தீயகொள்கைகள் இன்னதென எல்லாருக்கும் பிரபல்யமாகி விட்டது. இத்தியாதி காரணத்தால் மக்களைப் பீடித்திருந்த தீய கொள்கைகள் பறந்தோடின. இம் மகத்தான வெற்றிக்கு நமது ஹிபாஜத்துல் இஸ்லாத்தின் இடைவிடா உழைப்பே காரணமாக யிருப்பதால், அச்சங்கத்தின் சார்பாய் எங்களுக்கு ஸிலோன் முஸ்லிம்கள் முகமன்கூறி இச் சங்கத்தின் ஸ்தாபகர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் துஆவும் செய்தார்கள்.

இஸ்லாமியப் பிரசாரத்திற்கு கம்பளை டவுன் ஓர் முக்கியஸ்தலமாகும். 1925-ஆம் ஆண்டில் இவ்விடத்தில் இலங்கை முஸ்லிம்களின் மஹாநாடொன்று கூட்டப்பட்டது. அதற்கு பிரபலஸ்தர்கள் சமூகமளித்தனர். அம் மஹாசபையில், காதியானிகளின் கொள்கைகள் சுத்த சத்திய இஸ்லாம் மதத்திற்கு விரோதமானதென ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டு ஸிலோன் முழுவதிலும் பிரகடனப் படுத்தப்பட்டது. இவ் உத்தம கைங்கரியத்தை அவ்வூர் வாசிகளும், பிரபல வியாபாரிகளும், ஸ்டேட்காரர்களுமான ஆலி ஜனுப் எம். எஸ். என். உமர்பாக்ஷா அவர்களும், எம். எஸ். சைய்யிது முகம்மது மரைக்கார் அவர்களும் முன்னின்று நடத்தி வெற்றிபெற்றார்கள் என்பது யாவருமறிந்ததே. இக்கனவான்கள் எங்களை உபசரிப்பதிலும் எங்கள் நோக்கத்தை ஆதரிப்பதிலும் காட்டிய ஊக்கத்திற்கும் உற்சாகத்திற்கும் ஓர் அளவுகூற முடியாது. இக் கனவான்களின் முயற்சியால் அவ்விடம் 17-7-38ல் ஓர் மஹாநாடு நடத்தப்பட்டது. அக் கூட்டத்திற்கு ஜனுப் எ. எம். சுல்தான் சி. சி. தலைமை வகித்தார். அதுபொழுது இஸ்லாத்தின் மூலக் கொள்கைகளையும் காதியானிகளின் தீய பிரசாரத்தையும் விவரிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டோம். அதின்படியே எல்லா விஷயங்களும் எடுத்துரைக்கப்பட்டது. தலைவரும் காதியானிகளின் தீய நோக்கத்தை பிரஸ்தாபித்ததோடு ஹிபாஜத்துல் இஸ்லாத்தின் சேவைகளையும் போற்றி முடிவுரை கூறினர். ஜனுப் எம். எஸ். என். உமர்பாக்ஷா அவர்கள் நமது சங்கத்தின் நோக்கத்தையும், சேவையையும் புகழ்ந்து அதன் பண்டுக்காக சமீபத்தில் ரூ. 500 நன்கொடை அளிப்பதாக வாக்களித்துள்ளார்கள். பின்னர் 13-7-38ல் பதுளை, பஸரை முதலிய ஊர்களுக்குச் சென்று அங்கு ஜனுப்களான K.M.S. முகைதீன் ஸஹாஹுத்தீன், S. M. மைதீன் மீரு சாஹிபு இவர்களின் விருந்தினர்களாகத் தங்கியிருந்தோம். அங்கும் பலபிரசங்கங்கள் நடைபெற்றன.

எங்களை வரவேற்று உபசரித்த எல்லா முஸ்லிம்களுக்கும் எங்களுடைய மனமார்ந்த வந்தனத்தை சமர்ப்பித்துக் கொள்கிறோம். என்றாலும் டெபுடேஷனுடன் ஈடுபட்டுழைத்த ஒரு சிலரின் விபரத்தை ஈண்டு குறிப்பிடவேண்டியிருக்கிறது. பொதுவாக சாத்தன்குளத்து முஸ்லிம்கள் இது விஷயத்தில் அதிகப் பங்கெடுத்துக்கொண்டார்கள். அவர்களில் கொழும்பு பழைய சோனகத் தெரு பிரபல தேயிலை, ஏலக்காய் வியாபாரியும், மார்க்காபிமானியுமான ஆலி ஜனுப் N. S. M. அபூபக்கர் & பிரதர் ஹாமிது மரைக்காயர் அவர்கள் எங்களுக்குச் செய்த உபசரிப்பு அளவிட முடியாது. இந்நான்கு மாதக் காலத்தில் பெரும்பாலும் அவருடைய விருந்தினராகவேதான் யிருந்து வந்தோம். அங்கு தேயிலை வியாபாரம் செய்யும் ஷேக் மதார் எங்களுக்கு வேண்டிய சௌகரியங்களை கவனித்து வந்தார். கண்டியில் K. K. பாவா & பிரதர்ஸ் செய்த உபசாணையை எங்கள் பேனா முனையால் எழுதிமுடிக்க முடியாது. வத்துகாமம் ஜனுப் எம்.எஸ். நாகூர் பிச்சை மரைக்காயர் அவர்கள் நமது டெபுடேஷனுக்கு ஓர் காரிய தரிசிபோல் யிருந்து எல்லாக்காரியங்களையும் கவனித்து வந்தார்கள்.

இவர்களும் மற்ற கனவான்களும் நம் கோரிக்கையில் அதிக முயற்சி எடுத்தனர். என்றாலும் வியாபாரச் சுணக்கத்தாலும், விளை பொருள்களின் விலைக்குறைவாலும் அதிக பிரயோஜன மேற்பட முடியவில்லை. நல்லகாலமாயிருந்திருக்கும் பக்ஷத்தில், இம் முயற்சியைக்கொண்டே

சங்கத்தின் தேவைகள் ஒருவாறு முடிந்திருக்கும் என்பதிலையில்லை. என்றாலும் இந் நெருக்கடியான காலத்தில் கனவான்கள்செய்த உபகாரத்தை போற்றாமலிருக்க முடியாது. அவர்களளித்த நன்கொடை விபரம் இதன்கீழ் பிரசுரிக்கப்பட்டுளது. அக்கனவான்களுக்கு அல்லாஹுத ஆலா இகபர சாதனங்களைக்கொடுத்தருள்வானாகவும். ஆமீன்.

டேபுடேஷன் அங்கத்தினர்கள்.

---

## சிலோனில் நன்கொடை அளித்த கனவான்கள் விபரம்

### கொழும்பு

| | ரூ. | அ. |
|---|---|---|
| மெஸ்ஸர்ஸ் N. S. M. அபூபக்கர் & பிரதர்ஸ் | 200 | 0 |
| மேமன் ஜமாஅத்தார்கள் | 100 | 0 |
| மெஸ்ஸர்ஸ் S. T. R. சாலே முகம்மது & Co. | 50 | 0 |
| ,, H. A. K. ஹாஜி அப்துல் கரீம் & Co. | 50 | 0 |
| ஜனாப் ஹாஜி நா. கு. அஹ்மத் மீறுதம்பி | 50 | 0 |
| ,, செ. ப. ஆதம் முகம்மது மரைக்காயர் | 50 | 0 |
| மெஸ்ஸர்ஸ் ப. நா. மு. & பிரதர்ஸ் | 40 | 0 |
| ஜனாப் செ. ப. அபூபக்கர் மரைக்காயர் | 40 | 0 |
| மெஸ்ஸர்ஸ் ஹாஜி அப்துல் கரீம் ஹாஜி உஸ்மான் | 25 | 0 |
| ,, T. P. குஞ்சு மூஸா & Co. | 25 | 0 |
| ,, அஹ்மத் அப்துஸ் ஸத்தார் சேட் & Co. | 25 | 0 |
| ஜனாப் H. K. டாடா சேட் | 25 | 0 |
| ,, A. M. முகம்மது நூகு மரைக்காயர் | 25 | 0 |
| ,, S. A. M. அப்துல் காதிர் சாஹிப் (மௌலானா) | 25 | 0 |
| ,, M. M. முத்து வாப்பா மரைக்காயர் | 25 | 0 |
| ,, ஹாஜி P. B. உப்பிச்சி & Co. | 25 | 0 |
| மெஸ்ஸர்ஸ் A. மீரா முகைதீன் & சன்ஸ் | 20 | 0 |
| ,, A. H. P. இஸ்ஹாக் சேட் | 15 | 0 |
| மெஸ்ஸர்ஸ் D. A. கான் & Co. | 15 | 0 |
| ஜனாப் மீ. மு. அப்துல் காதிர் மரைக்காயர் (பம்பளபிட்டி) | 15 | 0 |
| ,, D. H. P. மூஸா | 10 | 0 |
| மெஸ்ஸர்ஸ் H. ஹபீப் & Co. | 10 | 0 |
| ,, A. S. M. M. ஹாஜியார் & Co. | 10 | 0 |
| ஜனாப் S. S. சுலைமான் ரூவுத்தர் | 10 | 0 |
| மெஸ்ஸர்ஸ் M. A. S. ஹாஜியார் & Co. | 10 | 0 |
| ஜனாப் M. H. இஸ்மாயீல் | 10 | 0 |
| மெஸ்ஸர்ஸ் A. B. H. நூர் முகம்மது & Co. | 10 | 0 |
| ,, M. K. M. R. அஸனா லெப்பை & Co. | 10 | 0 |
| ,, V. M. காதிர் மீரா சாஹிப் & Co. | 10 | 0 |
| ,, M. A. ஷேக் மதார் மரைக்காயர் | 10 | 0 |
| ,, S. T. R. மூலம் சில்லறை | 8 | 12 |
| ,, வலி நூர் முகம்மது & Co. | 5 | 0 |
| ஜனாப் அஹ்மத் ஹாஜி ஜகரிய்யா | 5 | 0 |

### புத்தளம்

| | | |
|---|---|---|
| ஜனாப் T. S. M. அப்பாஸ் மரைக்காயர் | 25 | 0 |
| ,, S. A. K. ஹமீது ஹுஸைன் மரைக்காயர் | 20 | 0 |
| ,, M. C. M. முகம்மது நெய்னா மறைக்காயர் | 10 | 0 |
| ,, H. S. இஸ்மாயீல் மரைக்காயர் புரக்டர் | 10 | 0 |
| ,, K. E. S. ஷேக் முகம்மது மரைக்காயர் | 1 | 0 |

### வத்துகாமம்

| | | |
|---|---|---|
| மெஸ்ஸர்ஸ் சி. மு. முகம்மது முகைதீன் & Co. | 50 | 0 |
| மெஸ்ஸர்ஸ் மீ. செ. செய்கு அலியார் & Son | 50 | 0 |
| ஜனாப் கு. மு. அ. அப்துற் றஹ்மான் மரைக்காயர் | 15 | 0 |
| ,, செ. மு. சா. முகைதீன் ஹம்ஜா மரைக்காயர் | 15 | 0 |
| ,, B. M. அப்துல் ஹமீது மரைக்காயர் | 10 | 0 |
| ,, P. S. M. ஷேக் முகம்மது மரைக்காயர் | 10 | 0 |
| ,, மு. சி. மு. முகம்மது அப்துல் காதிர் மரைக்காயர் | 7 | 0 |
| ,, ச. அ. ஷாகுல்ஹமீது மரைக்காயர் | 5 | 0 |
| ,, கொ. அ. கா. காதிர்மீரா சாஹிப் | 5 | 0 |
| மெஸ்ஸர்ஸ் கா. செ. மு. அப்துல்காதிர் & Co. | 5 | 0 |
| ஜனாப் A. C. முஸ்தபா மரைக்காயர் | 3 | 0 |
| ,, செ. மு. முகம்மதுமுகைதீன் ஆலிம் | 3 | 0 |
| மெஸ்ஸர்ஸ் அ. ப. ஜைனுல் ஆபிதீன் & Co. | 2 | 0 |

| | | |
|---|---|---|
| ஜனுப் செ. நூர் முகம்மது | 1 | 0 |
| ஆதம்பாவா | 0 | 8 |
| ஜனுப் லெ. அ. முகம்மது யூனுஸ் லெப்பை (அரத்தன்ளே) | 25 | 0 |
| மெஸ்ஸர்ஸ் வா. கொ. செ. பா. ஷேக் முகம்மது & Co. (பன்வலே) | 5 | 0 |
| ஜனுப் அ. அ. முகம்மது காஸிம் (பன்வலே) | 5 | 0 |

கண்டி

| | | |
|---|---|---|
| மெஸ்ஸர்ஸ் K. K. பாவா & பிரதர்ஸ் | 25 | 0 |
| ,, K. A. M. P. மீரா சாஹிப் & பிரதர்ஸ் | 10 | 0 |
| ஜனுப்ஹாஜி S. H. M. அப்துல்காதிர் (குருகுடை) | 10 | 0 |
| மெஸ்ஸர்ஸ் மு. க. அ. முகம்மது முத் தலிபு லிமிடெட் | 7 | 0 |
| ஜனுப் ஹாஜி ஆதம் சேட் | 5 | 4 |
| மெஸ்ஸர்ஸ் மஜீது & பளீல் | 5 | 0 |
| ,, ஹாஜி நெ. மு. மூஸா நெய்னு & ஸன்ஸ் | 5 | 0 |
| ஜனுப் அப்துல்லாபாய் | 3 | 12 |
| ,, யூசுப்பாய் | 2 | 8 |
| ,, A. F. முகம்மது பாய் | 2 | 8 |
| ,, ஆதம் ஷரீப் பாய் | 2 | 8 |
| ,, மு. அ. முகம்மது அப்துல்கபூர் | 2 | 0 |
| ,, S. L. சின்ன லெப்பை | 1 | 0 |
| ,, ஹாஜிதாஹிர் முகம்மது சேட் | 1 | 0 |
| ,, A. R. சுலேமான் சேட் | 1 | 0 |
| ,, மூஸாபாய் | 1 | 0 |
| ,, கண்ணுடி பாய் | 1 | 0 |
| கண்டி மார்க்கட் முஸ்லிம்கள் | 5 | 0 |
| பஸரை, ஜனுப் S. M. முகைதீன் மீரா சாஹிப் | 25 | 0 |
| பண்டாரவளே, K. K. ஹம்ஜா முகைதீன் | 10 | 0 |
| பதுளே M. மக்தூம் முகைதீன் சாஹிப் | 5 | 0 |

கம்பளே

| | | |
|---|---|---|
| ஜனுப் M. S. N. உமர் பாக்ஷா சாஹிப் | 25 | 0 |
| ,, ம. செ. செய்பத் முகம்மது மரைக்காயர் | 15 | 0 |
| மெஸ்ஸர்ஸ் நூர்ஜஹான் & Co. | 10 | 0 |
| ஜனுப் கா. ப. நாகூர் மீரா | 5 | 0 |
| ,, I. J. காஸிம் சாஹிப் | 5 | 0 |
| ,, அ. ச. முகம்மது தமீம் | 5 | 0 |
| ,, கா. மு. அப்துல் கனி சாஹிப் | 5 | 0 |
| மெஸ்ஸர்ஸ் வ. செ. மு. முகைதீன் மீரா சாஹிப் & Co. | 5 | 0 |
| ஜனுப் மீ. செ. நா. வரிசை அஹ்மது சாஹிப் | 5 | 0 |
| மெஸர்ஸ் அ. அப்துல்ஹமீது & Co. | 5 | 0 |
| ஜனுப் Y. M. இமாம் சாயபு | 4 | 0 |
| ,, மு. க. செ. அப்துல்காதிர் | 3 | 0 |
| ,, A. M. அபூஹனீபா | 3 | 0 |
| ,, E. முகம்மது சுல்தான் சாயபு | 3 | 0 |
| ,, E. ஜைனுல் ஆபிதீன் சாயபு | 3 | 0 |
| ,, அ. பி. மு. | 3 | 0 |
| ,, அ. அப்துற்றஹ்மான் சாயபு | 3 | 0 |
| ,, கா. மு. செ. ஷேக் மதார் சாயபு | 3 | 0 |
| ,, செ. மு. செ. | 3 | 0 |
| ,, அ. வ. ப. அப்துற்றஹ்மான் சாயபு | 3 | 0 |
| ,, A. Z. அபிதீன் | 3 | 0 |
| ,, E. மொன்னு அகமது | 2 | 0 |
| ,, இஸ்மாயீல் தாதா சேட் | 2 | 0 |
| ,, அப்பா அப்துற்றமான் சேட் | 2 | 0 |
| ,, K. P. பள்ளிக்குட்டி | 2 | 0 |
| ,, நெ. கா. ஷேக் முகமது | 2 | 0 |
| ,, P. S. M. அடுமை | 2 | 0 |
| ,, ம. பகீர் மைதீன் சாயபு | 2 | 0 |
| ,, மு. தா. மதார் சாயபு | 2 | 0 |
| ,, த. அ. கா. ஹத்தாத் | 2 | 0 |
| ,, T. P. உஸ்மான் | 2 | 0 |
| மெஸ்ஸர்ஸ் மு. கி. அ. சாயபு & Co. | 2 | 0 |
| ஜனுப் S. L. M. ஹமீது | 1 | 0 |
| ,, P. முகம்மது | 1 | 0 |
| ,, S. K. காதர் மீரா சாஹிப் | 1 | 0 |
| ,, நா. இ. அப்துல் கபூர் | 1 | 0 |
| ,, E. P. அபூபக்கர் | 1 | 0 |
| கீரப்பளே நிஅமத்துல் இர்ஷாதிய்யா முஸ்லிம் சங்கம் | 5 | 0 |
| கட்டுகாஸ் தோடா அ. க. செ. செய்யத் இப்ருஹீம் | 5 | 0 |
| ,, மெஸ்ஸர்ஸ் ப. மு. ஷேக் முகம்மது & Co. | 3 | 0 |
| ஜனுப் வ. மி. ஷம்ஸுத்தீன் சாஹிப் | 2 | 0 |

ஆககூடுதல் ரூ. 1537 12 0

இதுவன்றி ஹி.இ. மாசிகையின் சந்தா பாக்கிகளில் சில வசூலானதுடன், சிலர் தங்களை புதிய சந்தாதார்களாகப் பதிந்து கொண்டு அதன் சந்தாவையும் செலுத்தியிருக்கின்றனர். நமது மாசிகையின் அபிவிர்த்தியை நாடி கம்பளையின் பிரபல்ய ஸ்டேட் சொந்தக்காரர்

ஜனுப் M. S. N. உமர் துபாக்ஷா சாஹிப் U. D. C. அவர்கள் அடுத்துவரும் ஜனவரியில் ரூ 500 நன்கொடை அளிப்பதாக வாக்களித்திருக்கிறுர்கள். தொழுப்பு ஜனுப் M. S. கனுங்கு மொய்தீன் அவர்கள் ரூ 100 நன்கொடை அளிப்பதாக வாக்களித்திருக்கிறுர்கள்.

## ஹிபாஜத்துல் இஸ்லாம் மௌல்விகளுக்கு பாராட்டு

"ஹிபாஜத்துல் இஸ்லாம்'' சங்கத்தைப் பலப்படுத்தி இஸ்லாமியப் பிரசாரம் செய்யவும் அதன் ஒப்பற்ற மாசிகையை எங்கும் பரவச் செய்யவும் கருதி, மௌல்வி அல்ஹாஜ் எஸ். வ. முகம்மதலி சாஹிப் அவர்களும், ஜனுப் மௌல்வி முகம்மது மியான் சாஹிப் அவர்களும் இலங்கை வந்தார்கள். வரும் வழியில் நானும் திருச்சியிலிருந்து இலங்கை வந்து கொண்டிருந்தேன். நான் அவர்களை ரயிலில் சந்திக்கவேண்டிய சந்தர்ப்பம் கிடைத்தது. "தாருல் இஸ்லாம்'', "தேச சேவகன்'' இவைகள் தற்சமயம் முஸ்லிம் லீகை எதிர்த்துப் பிரசாரம் செய்துகொண்டு வருவதைக் கண்டித்து அவர்களிடம் என் அபிப்பிராயத்தைத்தெரிவித்தேன். அவர்களும் தங்கள் அபிப்பிராயத்தை அறிவித்தார்கள். நான் கூத்தாநல்லூர் சென்றிருந்தபோது, எனது நண்பரும் "தாருல் இஸ்லாம்'' பத்திரிகையின் வளர்ச்சிக்குக் காரணபூதராக இருந்தவரும், அக்கம்பனியின் பிரபல பங்காளியுமான எஸ். இ. எஸ். இஸ்மாயில்கனி சாஹிப் அவர்களையும் சந்தித்தேன். அவர்களும் "தாருல் இஸ்லாத்''தின் தற்போதைய அரசியல் கொள்கைகளை மிகமிகக் கண்டித்தார்கள். அகில இந்திய முஸ்லிம்களும், லீகை ஆதரிக்கும்போது "தாருல் இஸ்லாம்'' எதிர்ப்பதின் மர்மம் சிதம்பர இரகசியமாகவே யிருக்கின்றது. மத சமூக விஷயத்தில் நிலையற்ற கொள்கையையுள்ள அதன் ஆசிரியர் அரசியலிலும் நிலையற்றிருக்கிறுர் போலும். "தாருல் இஸ்லாம்'' ஆசிரியர்மீது எனக்குத் தனிப்பட்ட முறையில் குரோதம் கிடையாது. எனினும், அவருடைய தவறுன பிரசாரத்தைக் கண்டிக்காமலிருக்க முடியவில்லை. அவருடைய தவறுன கொள்கைகளைப் பொது ஜனங்களுக்கு விளக்க எனக்கு நல்லசந்தர்ப்பம் கிடைத்தது.

நான் முதன்முதலாக ஹிபாஜத்துல் முஸ்லிம் மௌலானுக்களுடன் சேர்ந்து கம்பளையில் ஒரு பிரசங்கம் செய்தேன். கம்பளைதான் இலங்கையில் முஸ்லிம்களின் மதப்பிரசாரத்திற்குநடுநாயகமாகவிளங்குகிறது. அங்குள்ள முஸ்லிம்கள், மாபெரும் மஹாநாட்டைக்கூட்டி மௌல்விகளைவரவேற்று உபசரித்தார்கள். எனது நண்பர் ஜனுப் உமர் பாக்ஷாதான் இதற்கு முக்கிய காரணஸ்தர் என்பதை மறுக்க முடியாது. மதப் பற்றுள்ளவரும், கொடை வள்ளலுமான அவர் இம்மாதிரியான நல்விஷயங்களுக்கு மிகவும் உதவிசெய்யக் கூடியவர். அவர் ஹிபாஜத்துல் இஸ்லாம் நிதிக்கும் தக்க உதவிபுரிந்தார். இவரைப்போன்று கம்பளையிலும் மற்றும் பல இடங்களிலும், இஸ்லாத்தின் மாட்டுக்கொண்டுள்ள அபிமானத்தின் காரணமாகப் பல செல்வந்தர்கள் நன்கொடையளித்து உதவினுர்கள். இன்னும் பல அன்பர்கள் பத்திரிகைக்கு சந்தாதாரராகச் சேர்ந்தார்கள். நானும் சமயம் வாய்த்தபோதெல்லாம் இம் மௌல்விகளுக்கு உதவிசெய்தேன். ஹிபாஜத்துல் இஸ்லாம் மௌல்விகள் இலங்கை விஜயம் செய்ததினிமித்தம் இலங்கை முஸ்லிம்கள் ஒரு புத்துணர்ச்சி பெற்றிருக்கிறுர்கள் என்று சொல்வது மிகையாகாது. மௌல்வி முகம்மது மியான் சாஹிப் பல அரிய உபந்நியாசங்களைச் செய்தார். அவர் பிரசங்கம் வீரம் பொருந்தியதாக யிருந்தது. தங்களுடைய சிரமத்தைப் பொருட்படுத்தாமல் இலங்கை விஜயஞ்செய்து மதப்பிரசாரம் செய்து வெற்றியுடன் இந்தியா திரும்பிய எனது நண்பர்களைப் பாராட்டுகிறேன்.

வ. மி. ஷம்சுத்தீன் சாஹிப்

---

## சிலோன் சந்தா நேயர்கட்கு !

நமது டெபுடேஷன் சிலோன் வந்திருந்தகாலை அங்குள்ள அநேக ஊர்களுக்கு டெபுடேஷன் அங்கத்தினர் செல்வதற்கு சௌகரிய மேற்படாது போயிற்று. ஆகவே, அவ்வூர்களிலுள்ள நமது சந்தா நேயர்கள் தங்கள் பாக்கிகளை உடனே அனுப்பிவைப்பார்களென்று எதிர்பார்க்கிறேம்.

# இஸ்லாமும் விபசார விலக்கும்

(பெரியக்கிரூரம் கா. அ. அப்துல் ஹலீம் ஸாஹிப் வரைவது)

இஸ்லாத்தின் ஞானதீபம் இப் பூவுலகின்மீது படை யெடுக்கு (தன் ஒளியைப் பரப்பு) முன், அரேபியாவை அறியாமை யென்னும் அகாதம் ஆட்சி செய்தகாலே அவ்வரேபியர் களில் அடிக்கடி உதிரங்களை ஊற்றிக்கொள்ளும் யுத்தங்கள் நிகழ்வுற மூலகாரணங்களில் விப சாரமும் ஒன்ருகும்.

ஒற்றுமை, சமாதானம் ஆகியவைகளாலேயே அஸ்திவார மிடப்பட்ட மதம் இஸ்லாமென்பது அதனைப்பற்றி ஆராய்ச்சியுள்ள எவரும் மறுக்க வியலாத உண்மையாகும்.

நேயன்மீர்! மேனுட்டு மோகம்பிடித்த சில நண்பர்கள் தங்கள்மதம் தங்களுக்கு முட்டுக் கட்டையாக விருப்பதாய் எண்ணுகின்றனர். அதோடுமட்டும் நில்லாது மத அறிஞர்களிடம் தகையற்ற சில வினுக்களேயும் விடுக்கின்றனர். சில விஷயங்களில் மார்க்கம் கூறுவது பகுத் தறிவுக்கு ஒற்றில்லே என தாங்களாகவே முடி வும் கட்டி விடுகின்றனர். தமக்குத் தெரியாத விஷயங்களைக் கற்ருேரிடத்து கேட்டுத் தெரிந்து கொள்வதை எவரும் குற்றமாகக் கரு தார். ஆனல், தன் பகுத்தறிவே பகுத்தறி வென்றெண்ணி மார்க்காசாரங்களில் குறை கூற அணுகவேண்டாமென்றுதான் நாம் அன் ருேருக்கு கூறுகின்ருேம்.

நம் நண்பர்கள் மனதில் தோன்றி மறையும் சந்தேகங்களில் "விபசார விலக்கு"ம் ஒன்ருகும். அதாவது, உலகில் இறைவனல் சிருஷ்டிக்கப் பட்ட சிருஷ்டிகளுள் ஜீவ வர்க்கத்தை மட்டும் ஆண்,பெண் என்ற இரு வகுப்பாய் வகுத்திருக் கிருன். அதனுள் மனுஷ ஜாதியரை மட்டும் இதரவைகளைவிட சிரேஷ்ட சிருஷ்டியாயும், ஒன்ருேடொன்று பிணங்கியிருக்கு மியல் புடையதாயும் அமைத்திருக்கிருன். ஆண், பெண் இருவகுப்பினரும் சில அம்லங்களில் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருப்பினும் ஒரு வரை யொருவர் அவசியத்துடன் விரும்பும் சக்தியை அமைத்திருக்கிருன். எனவே, ஆண்க ளின்விருப்ப நிவர்த்திக்கு பெண்களையும்,பெண் களின் இச்சையை தீர்த்துவைக்க ஆண்களை யும் படைத்திருக்கிருன் போலும். இத்தகைய பாக்கியத்தை பொதுவாய் இஷ்டப்படி அனுப விக்க மார்க்கம் தடைசெய்கிறது; நிபந்தனைப் படி—விவாஹ வாயிலாக 4 பெண்கள் வரை சம்பந்தம் வைத்துக்கொள்ள உத்திரவளிக் கிறது; மார்க்கம் ஏன் மட்டிடவேண்டும்? விவாஹ சம்பந்தம் எதற்கு? என்னும் சந்தே கங்களை இங்கு கிளப்புகின்றனர். இதற்கு ஒரு வாறு பதில் கூற விரும்புகிறேன். இதிலிருந்து சன்மார்க்காசிகளான நேயர்கள் விபசாரத்தீயி லிருந்து வெளியேறுவதல்லாமல் சுத்த சத்திய இஸ்லாத்தின் உன்னத கருத்துக்களை உணர் வார்கள் என்ற ஆதரவுடன் இதனை ஆரம்பிக் கின்றேன்.

உலகிலுள்ள பெண்மணிகளெல்லாம் ஒவ் வொரு ஆடவனின் அவசியத்தைத் தீர்க்கும் பொருட்டே படைக்கப் பெற்றிருக்கிருர்கள். இதேபோல் ஆண்களும், பெண்களின் அவாவை பூர்த்தி செய்வதற்கே படைக்கப்பட்டிருக்கிருர் கள் என்பது உண்மை. உலகப் பெண்மணி களுள் அவர்களுடைய பெண்டீர்களும் சேர்ந்த வர்களே. மற்றப் பெண்களுக்கில்லாத எது வும் இவர்களுக்கு அதிகப்படியில்லே. அவர்க ளுடைய அம்ஸங்களில் எதுவும் இவர்களுக் கில்லாமலும் இல்லே என்பதை எவரும் மறுக்க முடியாது. இதர பெண்மணிகள் பிற ஆடவர் களுக்காக சிருஷ்டிக்கப் பெற்றிருப்பதுபோல் தங்களுடைய ஸ்திரீகளும் படைக்கப்பட்டிருக் கிருர்கள் என்பதை எவரும் ஒப்புக்கொள்ளாம லிருக்க முடியாது. இஃதிங்ஙனமிருக்க, இவர் களின் பெண்டீர்க (தமக்கை, தங்கை, துணைவி முதலியவர்க) ளிடம் அந்நிய ஒருவன் கலந்துற வாடுவதென்ன? ஒரு சில நிமிடம் தனித்து நின்று பேசிக்கொண்டிருப்பதையேனும் மனம் சகிப்பார்களா? அப்படி எத்தனை நாள் விட் டிருப்பார்களோ தெரியவில்லே!

சுத்த இரத்தமுள்ள மனிதன் தமது பெண் களை சில நிமிஷங்கள் அன்னியன் கூர்ந்து பார்ப் பதை பொருத்துக்கொண்டிருப்பதில்லே. இரத் தக் கொதிப்படைந்து உடனே அவன் மீது

பாய்ந்து விட எண்ணுகிறான். அதன் காரணமாக மிகமிக உற்ற உறவினராயினும் ஸ்நேகனாயினும் வெறுப்பு ஏற்படுகிறது, ஆக்ரஷ்ண நெருப்பு துளிர் விட்டெரிகிறதென்றால் பார்வைக்கப்புறமுள்ள காரியாதிகளின் கதி என்னவாகும் என்பதை எனதன்பர்களே நிதானிக்கவும். அந்நிய ஒரு மாதை ஒருவன் கூர்ந்து பார்ப்பது அவளுடைய பொறுப்பாளிகளின் மனதைப் புண்படுத்தக்கூடியதா யிருப்பதாலும், காதற் கண்கள் சந்திப்பதே பல காரியங்கள் நிகழ்வுற காரணமா யிருந்து, கொலைகளும் நிகழ இடமுண்டாகையாலும், நம் நபிகள்பிரான் (ஸல்.) அவர்கள், "ஆண்கள் பெண்களையும், பெண்கள் ஆண்களையும் காதற் கண்கொண்டு பார்க்கவேண்டாம்" என விலக்கியுள்ளார்கள். ஒருவன் ஒரு பெண்ணை காதலிக்கிறான் என்றால் அவன் மரணத்திற்குக் காரணம் அவளுடைய பர்த்தா அல்லது சகோதரனை ஏற்படுகிறார்கள் என்பது மிகைபடுத்திக் கூறுவதாகா. அவள் நோய் கொலை பென்பதைதவிர வேறு எதையும் எதிர்பார்ப்பதற்கில்லை. இன்று உலகில் நிகழும் கொலைகளுக்கு தலையங்கங்கள் பெண்களாகவே காணப்படுகிறார்கள்.

ஒருவன் இரு நண்பர்களிடை மித்திரபேதம் உண்டுபண்ண வேணுமென்ற நோக்குடன், "உன் அகமுடையாளிடம் இன்னான் பேசிக் கொண்டிருக்கக்கண்டேன், எனக்கு சந்தேகம்" என்று சொல்லிவிட்டால் போதும். அன்றிரவு இவன் ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தான். அவன் வழக்கம்போல் தமது இரவு ஆகாரத்தை முடித்துக்கொண்டு தன் நண்பனைச் சந்திக்க வந்தான். "என்ன! சாப்பிட்டீர்களா" வென்று வாய் திறந்தான். ஆ! வென்று கத்தியால் குத்தப்பட்டு விழுந்தான் என்துபம், அவன் நாரதன் பேச்சைக் கேட்டு வீட்டுக்குப் போனான், தன் பெண்ஜாதியை கூப்பிட்டு விவாஹ றத்துச் செய்து வீட்டைவிட்டு துறத்திவிட்டான் என்பதும் போன்ற விஷயங்கள் நம்முன் தாண்டவமாடுகிறது. மனிதன், இத்தகைய விஷயங்களில் நிஜமா? பொய்யா? வென்று யோசிப்பதற்குகூட அவனது ஆக்ரஷ்ணம் அவகாசம் அளிப்பதில்லை என்றால், நேரில் கண்ட விஷயங்களை எங்ஙனம் சகித்துக்கொண்டிருக்க முடியுமென்பதை அறிவாளிகள் கவனிக்கவும். இத்தகைய ஆழிய கருத்துக்களை மேற்கொண்டேதான் காருண்ய மூர்த்தி (ஸல்.) அவர்கள் "ஒரு அந்நிய பெண்ணும், அந்நிய ஆணும் தனித்திருக்க வேண்டாம்; ஏனென்றால் மூன்றாவதாக அவர்களிடை ஷைத்தானிருக்கிறான்" என்று கூறியுள்ளார்கள். எந்த இடத்தில் ஒரு பெண்மணியும் ஒரு ஆடவனும் தனித்திருக்கிறார்களோ அந்த இடத்திற்கு சாத்தானும் ஹாஜிராகிறான்; அவன் அவர்களிடை காதல் நெருப்பை மூட்ட வழி கோலுவான்; அதைத் தொடர்ந்து பல யுத்தங்கள் நிகழ இடமுண்டு என்பதே இத்திருஹதீதின் பொருளாகும்.

பொறுப்பாளியற்ற அனாதைப் பெண்களிடமோ, வேசிகளிடமோ தொடர்பு வைத்துக்கொண்டாலும் மாச்சரியங்களுக்கும், கொலைகளுக்கும் வேலையுண்டு. அது எப்படி என்றால், ஒரு மடந்தை ஒரு யுவனை விரும்புவதாயிருந்தால் அவள் காம விகாரத்தை தீர்த்துக்கொள்ளும் நோக்கன்றி, அவன் அழகினால் அல்லது பணம் காசுகளில் ஆசை மேலீட்டால் விரும்பலாம். அதே அணங்கை மற்றொரு வாலிபன் அடைய முயர்ச்சிக்கிறான். அவன் முதல்வனை விட அழகிலும் செல்வாக்கிலும் சிறந்திருப்பதுடன் அவன் செய்து கொடுக்கப் போகும் சௌகரியங்களும் அதிகமாய்த் தெரியுமானால் அவ்வணங்கு யார்மீது அதிக அன்பு காட்டுவாள் என்பதற்கு ஜோதிடம் தேவையில்லை. முதல்வனின் இரகசியங்களை இவனிடம் மறைத்து வைப்பாள் என்பதற்கு என்ன ஆதாரம்? அவனை காட்டிக் கொடுக்கமாட்டாள் என்பதற்கு என்ன சான்று? அவ்விருவரும் அவளிருப்பிடத்தில் ஏககாலத்தில் எதிர்பட்டு மோதிக்கொள்ளும் ஒரு நாள் எந்நாளோ வென்பதைத் தவிர வேறு எதையும் எதிர் பார்ப்பதற்கில்லை.

ஒருவன் தன் மனையாளிடம் மற்றொருவன் பிரவேசித்துச் செல்லுகிறான் என்பதை தெரிந்தும் அறியாதவன் போலிருக்கிறான் என்றால், அவனுடைய பலாத்காரத்தை பயந்தோ அல்லது அவன் தன் எஜமான், அவனால்தான் பிழைக்கவேண்டியிருக்கிறதென்று அவன் அது விஷயத்தில் கவனஞ் செலுத்தாம லிருக்கலாமே தவிர, எதிரியும் தன்போன்ற மனிதன், தன்னகத்தாளுக்கு என்ன குறைந்துவிட்டது? என்ன நட்டம் வந்தது? என்று விட்டிருக்கிறான் என்று தாழ்த்தப்பட்டவனைக்கூட சந்தேகிக்க முடியாது. எதிரியை வெல்ல என்ன உபாயம் என்பதை எதிர் நோக்குவான், அல்லது தன் பெண்ஜாதியையேனும் முடிவுசெய்ய எத்தனிப்பான்.

சுருங்கச்சொன்னால், மனிதன் தனக்கு சொந்தமாயுள்ள எதுவிஷயமானாலும் பிறர் அதில் தலையிடுவதை சகித்துக்கொள்கிறான்; தமக்கு எத்துணை பெரியதீது செய்யினும் க்ஷமித்து விடுகிறான். ஆனால், தமக்குச் சொந்தமான ஸ்திரீகளிடம் பிறர் சகவாஸம் வைப்பதை மட்டும் மானிடனாய் பிறந்த எவனும் சகிப்பதில்லை என்பதற்கு உலகமே சாக்ஷியமாகும். எல்லாம் வல்ல கருணாலயனான இறைவன் தன் சிருஷ்டிகளுள் உயர்ந்த படைப்பான மானிடவர்க்கத்துள் ஒருவரையொருவர் தாக்கி பிரதான உயிரை நாசஞ்செய்துகொள்வதை பொருந்திக் கொள்வதில்லை. விபசாரத்தின் காரணமாய் பல்லாயிரம் உயிர்கள் சேதமாகும். மாந்தருள் அடிக்கடி மாச்சரியங்கள் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும். நிம்மதியுடனும், சந்துஷ்டியுடனும் வாழமாட்டார்கள் என்பனவற்றை முற்கூட்டியே அவன் அறிந்திருக்கிறானகையால், "விபசாரத்தின் பக்கல் அணுகவேண்டாம், நிச்சயமாக அது மிக தீயதாயிருக்கும், இன்னும் அது பாட்டையால் கெட்டது." என கடினமான தடையைப் பிறப்பிக்கின்றான். இத்திரு வசனத்தில் விபசாரம் "புரியவேண்டாம்" என்றுசொல்வதை விடுத்து, "அணுகவேண்டாம்" என்ற பதம் விபசாரம் மிக கொடியதாகும், அதன் வாடையே உதவாதென்பதைத் தக்கமுறையில் விளக்குகிறது.

இனி மீந்துள்ளவகை, "விவாஹ தொடர்பு தொன்றுதொட்டு நம்மில் நடமாடுவதால்தான் மேல்கூறிய குறைகள் ஏற்படுகிறது; விவாஹ சம்பந்தமே நம்மைவிட்டு அறுபட்டுவிட்டால் அஞ்ஞான்று எத்தகைய சங்கடமும் ஏற்படாது; மனிதன் உரோஷமும் படமாட்டான்" எனலாம். சண்டைச்சச்சரவுகள் ஏற்படாதென்று வைத்துக் கொண்டாலும், அது பெண்களின் வாணாளை வீணாளாக்குவதும், பெண் உலகத்தை படுகுழியில் தள்ளி—அவர்களை பொறுப்புள்ள ஆசானின்றி சந்தியில் நின்று தவிக்கும் நிலைமைக்கு கொண்டுவருதலுமாகும். அதாவது, விவாஹ சம்பந்தம் வேண்டாமென்பதின் கருத்து, பெண்கள் இஷ்டப்பட்ட ஆடவனுடனும் ஆடவர்கள் இஷ்டப்பட்ட பெண்களுடனும் கூடியிருக்கலாம் என்பதே. இந்த முறையில், பெண்கள் ஒருகாலம் வரை அன்றாடம் இஷ்டப்படி புதிது புதிதான ஆண்களுடன் சேர்ந்து கஷ்டமின்றி தங்கள் இயற்கை உணர்ச்சியை பூர்த்தி செய்து உல்லாசமாக காலங்கழித்து விடலாம். ஆனால், அதற்கு பின்னரோ அவர்கள் பெற்றெடுத்த பிள்ளைகளை அவர்களே போஷிக்கவேண்டியிருப்பது மட்டுமல்லாமல், தங்களுடைய ஜீவனோபாயத்திற்கும் தாங்களாகவே வழிதேட வேண்டியிருக்கிறது. ஏனென்றால், எப்பொழுது ஆடவர்கள் இஷ்டப்பட்ட பெண்களுடனும், பெண்கள் இஷ்டப்பட்ட ஆடவர்களுடனும் கூடியிருக்க அனுமதி பெற்றிருக்கிறார்களோ அதுபொழுது, ஒரு ஆடவன் இன்றோ, அல்லது சில நாட்களோ ஒரு பெண்ணுடன் சேர்ந்திருப்பான். அதே ஆடவனின் மனம், திடீரென்று வேறு பெண் பக்கல் திரும்பி விடலாம். இதே விதமாக பெண் மனமும் மாறலாம். இப்படியே மாறுதல் ஏற்பட்டுக்கொண்டுதானிருக்கும். யார் யாரை தடுக்க முடியும்? இந்த நிலைமையில் பெண்மணிகள் பிள்ளைகளை பெற்றெடுத்தால், அவர்களையும் பிள்ளைகளையும் போஷிப்பது யார்? அக்குழந்தைகளுக்கு தகப்பன் என்று யாரைக் குறிப்பிடுவது? எத்தனை பேரை நிர்ணயிப்பது? இறுதியாய் அப்பெண்கள் தங்கள் வாலிபத்தையுமிழந்து சிசுக்களுக்கு தாய்மார்களாயிருக்குஞ் சமயத்தில் அவர்களையும் குழந்தைகளையும் இரக்ஷிக்கக்கூடிய ஒரு மெய்யான கணவனில்லாவிடில் அவர்கள் எத்தகைய இடைஞ்சல்களுக் காளாகவேண்டியிருக்கிறதென்பதை நேயர்களே முடிவு கட்டவும்.

இத்தகைய இடைஞ்சல்களை விட்டு தப்பிக்க வழி விவாஹம் ஒன்றேயாகும். இதனாற்றான் இஸ்லாம் மார்க்கம் விவாஹத்தை (தன்னைக் காக்க முடியாவிட்டால்) வற்புறுத்தி, விபசாரத்தை முற்றிலும் வெறுக்கிறது. 4 பெண்களுக்கு அன்ன வஸ்திரம் கொடுத்து அவர்களை நீதமான முறையில் நடத்திவரும் ஆற்றல் இருப்பின், நால்வரை மணந்துகொள்ளலாம். இல்லையேல், நான்கிற்குக்கீழ் இயன்றளவு மணம் முடித்துக்கொள்ள உத்திரவளிக்கிறது. எனவே, எமது சுத்த சத்திய இஸ்லாம் இனியொரு சீர்திருத்தத்தின் பக்கல் தேவையற்றதாயும், சீர்திருத்தவாதிகளுக்கு ஒரிஜனலாயும், குர்ஆனில் இல்லாத ஒரு சீர்திருத்தத்தை எந்த சீர்திருத்தவாதியும் கொம்பு முளைத்தாலும் கியாம (தீர்ப்பு)நாள் வரையிலும் கொண்டுவர முடியாத விதத்திலும் அமைக்கப்பட்டிருப்பதை உணர்வார்களாக! விபசாரத்தை விட்டொழிப்பார்களாக!! இஸ்லாத்தின் கட்டளைகளை பின்பற்றுவார்களாக!!! ஆமீன் யா றப்பல் ஆலமீன்.

# ஜங்கீஸ்கான் சரிதை வரலாறு

(சென்ற ஆகஸ்டுமீ த் தொடர்ச்சி)

## ஆசியாவின் வீழ்ச்சி

மனித வாழ்வில் ஏற்றமும் இறக்கமும் இருப்பதுபோல சமூக வாழ்விலும் ஏற்றமும் இறக்கமும் இருந்து வருவது சரித்திர பூர்வமாகத் தெரிந்த விஷயமேயாகும். கி. பி. 1150 முதல் 1250 வரை ஆசியாவின் நிலைமை இறக்கத்திலேயே இருந்தது. ஏமாற்றம், பேராசை, அக்கிரமம், கோழைத்தனம், சிற்றின்பம் முதலியவைகளில் மூழ்கி இருந்தது. சுருங்கக் கூறின், ஆசியா தனது ஜீவியத்தின் கடைசி எல்லையை அடுத்திருந்தது என்று கூறுவது மிகையாகாது. ஆசியாவின் ஜீவியத்தில் லேவா தேவிக்காரர்களும், வட்டித்தொழில் புரிபவரும் தான் மேலோங்கி இருந்தனர். அவர்கள் தான் அரசர்களுக்கு ஆலோசனைக் கர்த்தர்களா யிருந்தனர். அவர்களின் காரணமாக தேசம் க்ஷீணித்துப் போயிருந்தது.

### அறபியரின் உபகாரம்

ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்கு மிடையில் நடைபெற்ற வியாபாரத்திற்கு முற்காலத்தில் மத்திய ஆசியா தான் வழியாக இருந்தது. கருங்கடல், செங்கடல், மத்திய தரைக்கடல் மார்க்கத்தில் இவ்வழி ஏற்பட்டிருந்தது. இவ்வழியில் தடையை ஏற்படுத்தி, அடைத்து விடுவது மட்டிலுமே யுத்தத்தின் வெற்றிக்கும் தோல்விக்கும் முக்கிய அறிகுறியாக இருந்தது. ஆதலால், கீழ் நாட்டிற்கும் மேனாட்டிற்குமிடையில் நேருக்குநேரான வியாபார சம்பந்தமில்லாம லிருந்தது, அறபியருக்கு மட்டிலும் தான் இவ் விஷயத்தில் நேருக்கு நேரான சம்பந்தமிருந்தது. அறபி வர்த்தகர்கள், சஞ்சாரிகள், பூமி சாஸ்திர நிபுணர்கள், விஞ்ஞானிகள், நூலாசிரியர்கள் உலகின் மிக விசாலமான பூபாகமெங்கும் பரவி இருந்தனர். இவர்கள் சீனவிலுள்ள கான்டன், ஹாங்காங், முதலிய நகரங்களிலும், மத்திய ஆசியாவின் பட்டணங்களிலும் பரவி வியாபாரத் துறையில் சம்பந்தம் வைத்திருந்தனர்.

## இஸ்லாமிய உலகின் இறக்கம்

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் மத்திய ஆசியாவிலும், ஈரானிலும் ராஜிய வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. பொருளாதார நிலைமை மிகவும் சீர்கேடாக இருந்தது. இதனால் பொது ஜனங்கள் மிகக் கஷ்டத்திற் தள்ளாயினர். துருக்கியர் ஸல்ஜோக்கியரின் அரசாங்கத்திற்கு ஆஸ்திவாரமிட்டிருந்தனர். அப்பாஸிய்யா வம்சத்து கலீபாக்கள் பெயருக்குமட்டில் சுல்த்தான்களாகவும் ஆத்மார்த்தத் தலைவர்களாகவும் கருதப்பட்டு வந்தனர். துருக்கி கோத்திரத்தின் சட்டதிட்டத்திற் கேற்ப அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் நாட்டின் பல பாகங்களிலும் சுயேச்சையுள்ள கவர்னர்களாக இருந்தனர். ஆகவே, கலீபா ஒருவராகவும், ஸல்ஜோக்கியா வம்சத்து அரசாங்கங்கள் பலவாகவும் இருந்தன. இச்சமயத்தில் ஸல்ஜோக்கியா வம்சத்திற்கு விரோதியாகவுள்ள ஒருவர் கார்ஜம் என்ற ஊரில் தோன்றினர். இவர் ஆரம்பத்தில் ஸல்ஜோக்கி அரசாங்கத்தின் பிரதிநிதியாக இருந்தாராயினும், தன்னை முற்றிலும் சுயேச்சை யுள்ளவராக்கிக்கொண்டு மத்திய ஆசியாவில் ஆதிக்கம் கொண்டு விட்டார். பதின்மூன்ருவது நூற்றாண்டில் இவரால் ஸ்தாபிக்கப்பட்ட "கார்ஜம் ஷாஹி" அரசாங்கம் ஈரான், இராக் ஆகியவைகளையும் கைப்பற்றிக் கொண்டது. நமது தமூஜன் ஜங்கீஸ்கானின் காலத்தில் இப்புதிய அரசாங்கத்திற்கு முஹம்மது ப்னு திக்ஷ்கான் ஜம்ஷாஹ் என்பவர் அதிபதியாக இருந்தார். இவர் இஸ்லாத்தை ஆதரிப்பவர் எனக் கருதப்பட்டுமிருந்தார். ஆனல், இவர் மிகப் பேராசையுள்ளவர். குராசானின் வியாபார வழியைக் கைப்பற்றித் தனது ஆதிக்கத்தில் கொண்டு வந்துவிட வேண்டுமென்பது இவரது விருப்பம். சீன துருக்கிஸ்தானில் முஸ்லிம்கள் ஏராளமாக வசித்துக்கொண்டிருந்தனர். ஆனல், அங்குள்ள அரசாங்கம் முஸ்லிம் அல்லாதாரின் அரசாங்கமாக இருந்தது

ஆகவே, முஹம்மதுப்னுதிக்ஷ் "இஸ்லாம் ஆபத்திலிருக்கிறது" என்ற கூச்சலைக் கிளப்பினார். ஆகவே, அங்குள்ள முஸ்லிம் வர்த்தகர்களும், ஜமீன்தார்களும் கிளர்ச்சி செய்து அவ்வரசாங்கத்தை ஒழித்து, முஸ்லிம் அரசாங்கத்தை ஏற்படுத்திக்கொண்டனர். என்றாலும், அக்காலத்தில் முஸ்லிம் உலகில், முஸ்லிம் சமூகத்தில்அநேக சீர்கேடுகளிருந்தன. உடன்பிறந்த சகோதரர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். அரசாங்கங்கள் தோன்றுவதும் மறைவதுமாக இருந்தது. கார்ஜம்ஷாஹி அரசாங்கம் இந்தியாவிலிருந்து துருக்கிஸ்தான், இராக், ஈரான்வரை பரவி யிருந்தது. ஆனால், அக்காலத்தில் அரியணையிலிருந்த அரசர் சிற்றின்பப்பிரியராக இருந்தார். மந்திரிகள் வஞ்சகர்களாயிருந்தனர். விவசாயிகளும், அடிமைகளும் மிகவும் தாழ்ந்த நிலையிலிருந்தனர். இவர்களது ஊழியங்களை நவாப்கள் தகாத முறையில் பிரயோஜனப்படுத்திக்கொண் டிருந்தனர். போக்குவரத்துக்குரிய சாதனங்கள் மிகக்குறைவாகவும் பலஹீனமாகவுமிருந்தன.

### சுல்த்தான் முஹம்மதும் ஜங்கீஸ்கானும்

சுல்தான் முஹம்மது கார்ஜம்ஷாஹ் சீன துருக்கிஸ்தானில் வெற்றியடைந்ததால், அவருக்கு அதிகத் துணிவேற்பட்டுவிட்டது. மங்கோலியாவையும், சீனாவையும் கைப்பற்றிக் கொள்ளவேண்டுமென்று கருதினார். ஜங்கிஸ்கானிடம் தமது ராஜதூர்தர்களையும் வியாபாரக் கூட்டத்தினரையும் அனுப்பினார். இத்தூதுவர்களது வேலை அத்தேசத்தில் உளவறிவதாகவே இருந்தது. ஜங்கிஸ்கான் இத்தூதுவர்களை வரவேற்று "நான் சூரியோதயஸ்தலத்திற்கு அரசன், நீங்கள் சூரியாஸ்தமன இடத்திற்கு அரசர்கள், நாமிருவரும் சிநேகமாகவும் அன்பாகவும் இருப்பதுடன், நமக்கிடையில் வியாபார சம்பந்தமு மிருக்கவேண்டும்" என்று கூறினார். பின்னர், ஜங்கிஸ்கானும் தன் சார்பாக ஒரு தூதுவக்கூட்டத்தை கார்ஜம்ஷாஹிடம் அனுப்பினார். இத்தூதுவர்களுடன் முஸ்லிம் வியாபாரிகளைக்கொண்ட ஒருபெரும் தாவளக்காரர்களும் வந்தனர். இவர்களது நோக்கம் ஜவுளிக்கொள்முதல் செய்வதாக இருந்தது. தவிரவும், இத்தூதுவக்கூட்டத்தினர் கார்ஜம்ஷாஹின் தேசத்தாராகவுமிருந்தனர். அப்படி இருந்தும், அவரது தாஷ்கந்து கவர்னர் இவ் வியாபாரத் தாவளக்காரர்களைக் கொள்ளையடித்ததுடன், நானூறு பேர்களையும், நான்கு பெரிய முஸ்லிம் வர்த்தகர்களையும் கொலை செய்துவிட்டார். இதனைக் குறித்து ஜங்கிஸ்கான் தூது அனுப்பினார். இத்தூதுவர்கள் சுல்தான் முஹம்மதுவின் கட்டளைப்படி கொல்லப்பட்டனர். ஆகவே, ஜங்கீஸ்கானுக்கும் சுல்தான் முஹம்மது கார்ஜம் ஜாஹுக்கும் சண்டை யுண்டாயிற்று.

முஸ்லிம் வியாபாரிகள் சுல்தான் முகம்மதுவினால் பாதகமடைந்ததால் முஸ்லிம்கள் ஜங்கிஸ்கானுடன் சேர்ந்தனர். நாட்டிலிருந்த குழப்பமும் கலகமும் ஜங்கிஸுக்கு அதிகவசதியாக இருந்தது. ஆதலால், அவரது படையெடுப்பை நிறுத்த சுல்தான் முஹம்மதால் முடியவில்லை. சுல்தான் முஹம்மது உயிர்தப்பி ஓடி, காஸ்பியன் கடலிலுள்ள ஒரு தீவில் அடைக்கலம் புகுந்து அங்கேயே மரித்தார். ஆகவே, கார்ஜம் அரசாங்கம் மொகலாயரின் குதிரைகளின் காலில் நசுக்கப்பட்டது. ஜங்கிஸ்கான் கொள்ளையடிப்பதில் கெட்டிக்காரன் என்ற பிரசித்தமும் ஏற்பட்டது.

### சாங்சூனும் ஜங்கீஸ்கானும்

அக்காலத்தில் சீன தேசத்தில் சாங்சூன் என்னும் ஒருவர் இருந்தார். இவர் அக்காலத்தில் சீனர்களின் பெரிய ஞானி என்பதாகவும் ஆத்மார்த்த உன்னதங்களை அடைந்தவராகவும் கருதப்பட்டு வந்தார். அது போழ்து இவருக்கு வயதும் 73க்கு அதிகமாக இருந்தது. இவர் சீனர்களின் பழைய மதமான தாயி மதத்தைச் சேர்ந்தவர். தனது மதத்தை ஓங்கச் செய்ய வேண்டும் என்பது இவரது கவலை. ஜங்கிஸ்கான் மொகலாய வம்சத்தினர். இவ்வம்சத்தினருக்கு மூடக் கொள்கைகள் அதிகமிருந்தன. இவருக்கு வயது 73 முடிந்திருந்தும் இன்னும் அதிக காலத்திற்கு சிரஞ்சீவியாக இருக்கவேண்டுமென்ற விருப்பமிருந்தது. ஆகவே, தம்முடைய ஜீவியத்தை அதிகப்படுத்திக் கொள்ள சாங்சூனின் உதவி ஜங்கிஸ்கானுக்கும், தமது மதத்தை ஓங்கச் செய்ய ஜங்கிஸின் உதவி சாங்சூனுக்கும் தேவையாக இருந்தது. ஆகவே, இருவரும் ஒன்று கூடினர். தாயி மதத்தவருக்கு வேண்டிய சகல மத உரிமைகளையும் சாங்சூன் பெற்றுக்கொண்டு, ஜங்கீஸ்கான் கக்ஷியில் சேர்ந்தார்.

அக்காலத்தில் சீனா தேசத்தில் கின், சோங் என்ற இரண்டு அரசாங்கங்கள் ஒன்றோ

டொன்று சண்டை போட்டுக்கொண்டிருந்தன. வகுப்புணர்ச்சியும் வைராக்கியமும் பலமாக இருந்தன. சாங்குனின் உதவியால் ஜங்கிஸ்கான் இவ்விரு அரசாங்கங்களையும் தக்க சமயத்தில் எதிர்த்துத் தோற்கடித்து ஆதிக்கங்கொண்டார்.

### ஜங்கீஸ் ஆட்சி

ஜங்கிஸ்கானின் தாய்நாட்டினராகிய மங்கோலியர்கள் ஆடு மேப்பவர்கள். அவர்கள் வசிப்பதற்குத் தக்க வசதி அந்நாட்டில் இருக்கவில்லை. இவர்களது நாடு பாலை நிலமாக இருந்ததால் இவர்களது ஜீவனத்திற்கும் அபிவிருத்திக்கும் தேவையான வசதிகளை அந்நாடு கொடுக்கவில்லை. அவர்களுக்குள்ள தேவைகளை செழிப்புற்ற நிலம்தான் கொடுக்கக்கூடியதாக இருந்தது. ஆதலால், அவர்கள் சிற்சில சமயங்களில் கொள்ளையடிக்கும் தொழிலைச் செய்யவேண்டியவர்களாக இருந்தனர். அவர்களுக்கு இத்தொழில் கேவலமானதாகவு மிருக்கவில்லை. ஆடு, மாடு, குதிரை, கம்பளி, உரோமம் ஆகியவைகள் தான் அவர்களது சொத்துகள். ஆகவே, அவர்கள் மங்கோலியாவிற்கு வெளியில் வந்து பலநாடுகளிலும் ஆதிக்கங்கொள்ள வேண்டியதாக இருந்தது. மொகலாயர்களது இவ்வெற்றியினால் உலகிற்கு அநேக நன்மைகளுண்டாயின. சீனாவிலுள்ள அநேக தொழில்கள் அவர்கள் மூலமாக உலகில் பரவின. ஐரோப்பாவையும் ஆசியாவையும் அவர்கள் இணைத்து விட்டனர். மொகலாயரின் படையெடுப்பு ஐரோப்பாவிற்கு நன்மையாயிற்று, அச்சுத்தொழில், கப்பலோட்டும் தொழில் முதலியவைகள் மொகலாயர் மூலமாக ஐரோப்பாவிற்குச் சென்றது. நாம் தூக்கத்திலிருந்தது நமது தவறே யன்றி மொகலாயரின் தவறன்று.

இப்பொழுது காலம் மாறி வருவதாகத் தோன்றுகிறது. மொகலாயரின் நிலைமையும் மாறி வருகிறது. அதே அழகிய பாயிகால் வரியின் பிரதேசம் கைத்தொழில் முதலியவைகளுக்கு உறைவிடமாகிக்கொண்டிருக்கிறது. ஜங்கிஸுடைய தாய் நாட்டில் குடியாசேற்பட்டிருக்கிறது. அங்கு மில்களும், தொழிற்சாலைகளும் பல ஏற்பட்டிருக்கின்றன. எலக்டிரி ஸிடிகளுக்கும் பஞ்சமில்லை. ஆனால், அன்று ஜங்கிஸ்கானும் அவரது துணைவர்களும் அற்பமாக மதித்த அவரது ஜாதியினர் இப்பொழுது பலவற்றையும் செய்கின்றனர். அவர்கள் ஜங்கிஸ்கானை மறந்து விடவில்லை.

குறிப்பு:—ஜங்கிஸ்கானின் வம்சத்தினருக்குள் ஏற்பட்ட சண்டையின் காரணமாக உயிர் தப்பி ஓடி வந்தவர்கள் தான் இந்தியாவில் மொகலாய அரசாங்கத்தை நிறுவி, இந்தியாவிலுள்ள முஸ்லிம்களுக்கு அநேக அரும்பெரும் தொண்டுகளைப் புரிந்தனர். ஜங்கிஸ்கான் முஸ்லிம் உலகின் மீது படை யெடுத்து வந்து துருக்கிஸ்தான், ஈரான், இராக் முதலிய நாடுகளை ஜெயித்து, முஸ்லிம்களைப் படுகொலை புரிந்த காலத்தில் அவர் முஸ்லிமாக இருக்கவில்லை. ஆனால், எல்லாம் வல்ல இறைவனின் சக்தி ஜங்கிஸை விடவில்லை. அவருடைய இருதயத்தில் ஈமானின் ஒளியை வீசிற்று. அவர் இஸ்லாம் மதத்தைத் தழுவி, இஸ்லாமிய உலகை அழித்த அதே ஜங்கிஸ் அவ்வுலகை மறுபடியும் உச்சஸ்தானத்திற்கு கொண்டுவர முயன்றார். அதுபோல, இஸ்லாமிய உலகையோ, முஸ்லிம்களையோ ஒழித்து விட எந்தச் சக்தியாலும் முடியாது. 'முகல்லிபுல் குலூ'பாகிய ஆண்டவன் மனமாற்றத்தை ஏற்படுத்தி தனது சன்மார்க்கத்தைக் காப்பாற்றிக் கொள்வான். என்றாலும், அவனது கட்டளைக்கு மாறாக நடந்த முஸ்லிம்களுக்குத் தண்டனை கொடுக்கும் முறையில் அவர்களுக்கு அந்நியரால் சில காலத்திற்கு கஷ்டமுண்டாகுமென்பதில் ஐயமில்லை. ஆகவே, இஸ்லாமிய உலகில் இப்பொழுதிருக்கும் கஷ்டங்களும் கொந்தளிப்புகளும் அவர்களது செய்கைகளுக்கு தண்டனையேயாகும். (ப. ர்.)

---

## சந்தா நேயர்கட்கு!

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தா ரூபாயை முன்பணமாகக் கொடுத்தால் தான் பத்திரிகையை அழகிய முறையில் நடத்திச்செல்ல சௌகரியமாக இருக்குமென்பது தங்களுக்குத் தெரிந்த விஷயமே. இந்நிலைமையில் 1938 ம் ஆண்டு பிறந்து 8 மாதம் செல்லுபடியாகியும் அநேகரின் சந்தா ரூபாய் இதுவரை வராமலே இருக்கிறது. நண்பர்கள் தயைகூர்ந்து கூடிய சீக்கிரம் அனுப்பிவைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

# காங்கிரஸும் பூரண சுயராஜ்யமும்

ஒருசமூகத்தினர் தங்களைப் புனருத்தாரணம் செய்ய வேண்டுமாயின், அதற்கு இரண்டு காரியங்கள் இன்றியமையாதவை. ஒன்று திட்டம் அல்லது கொள்கை. மற்றொன்று, திட்டம் அல்லது கொள்கையின்படி நடத்தல். இவ்விரண்டுமில்லாவிடில் எக்காரியமும் செய்து கொள்ள முடியாது. ஏனெனில், திட்டம் அல்லது கொள்கையை மிக அலங்காரமாக, கம்பீரமாக ஏற்படுத்திவிட்டு, அதன்படி நடக்கவில்லையானால், அல்லது அத்திட்டத்தைக் கிரியாம்சையில் கொண்டு வரவில்லையானால், அத்திட்டம் அல்லது கொள்கை வீணேயாகும். உலகில் ஏற்பட்ட பெரும் பெரும் மாறுதல்கள், புரட்சிகளெல்லாம் இவ்விரண்டையுமே அடிப்படையாகக் கொண்டு நிகழ்ந்திருக்கின்றது. வெறுந்திட்டத்தால் ஒன்றும் நடைபெறுவதில்லை. ஆகவே, திட்டத்தை அமலில் கொண்டுவருவதற்குத் தக்க ஆற்றலுள்ளவர்களும் தேவை. அத்தகைய மனிதர்கள் இல்லாவிடில், அத்திட்டம் வீணனதாகிவிடும்.

இதற்கு, முஸ்லிம்களது சரித்திரமே பகிரங்க உதாரணமாக இருக்கிறது. 14-நூற்றாண்டுகளுக்கு முன்னரிருந்த அதே கொள்கைகளும் திட்டமும்தான் இன்னும் முஸ்லிம்களிலிருந்து வருகிறது. ஆனால், அக்காலத்தில் அதனை அமலில் நடப்பித்த மனிதர்களைப் போன்றவர்கள் இக்காலத்தில் இல்லாததால், அந்தத்திட்டம் உயிரற்றதைப்போலாகி விட்டது. இக்கொள்கையின்படி நாம் காங்கிரஸ் இயக்கத்தைச்சிறிது ஆராய்வோம். "இந்தியாவிற்குப் பூரண சுயேச்சை கிடைக்கவேண்டும்" என்று காங்கிரஸ் கூறிவருகிறது. அது ஸ்தாபிக்கப்பட்டது முதல் இன்றுவரை இதையே கூறுகிறது என்பதையும்கூட விவாதத்திற்காக நாம் ஒப்புக்கொள்வோம். காங்கிரஸுக்குப் பரம விரோதியாகவுள்ளவன்கூட, காங்கிரஸின் இக் கொள்கையை எதிர்க்கவோ ஆக்ஷேபனைசெய்யவோ மாட்டான். ஆனால், காங்கிரஸின் இக் கொள்கைக்காக உண்மையுடன் உழைத்தவர்கள் எத்தனைபேர்? என்பதை ஆராய்வோம். காங்கிரஸ் தலைவர்களில் இரண்டொருவரைத்தவிர, வேறு யாரும் இதற்கு அந்தரங்க சுத்தியாக முன் வந்திருக்கமாட்டார்கள். மற்றவர்களது நாவிலிருந்து "சுயேச்சை," "சுதந்திரம்" என்ற பதங்கள் தோன்றினவானாலும், அவர்களது இருதயங்களில், வேறு உணர்ச்சிகளே இருந்தன. அவ்வுணர்ச்சிகளே அவர்கள் பகிரங்கமாக வெளியிடாமல் மறைத்து வைத்துக்கொண்டிருந்தனர். ஆதலால், முதலாவதாக பூரண சுயேச்சை என்பதற்குச் சரியான பொருள் யாது என்பதைக் கவனிப்போம்.

இப்பொழுது உலகில் கொடுங்கோலாட்சி மறைந்து ஜனநாயக ஆட்சி நடைபெறுகிறது என்பதை ராஜீய விஷயங்களில் ஈடுபட்ட ஒவ்வொருவரும் உணர்வர். எங்கேனும் இரண்டொரு இடங்களில் கொடுங்கோலாட்சி அல்லது யதேச்சாதிகாரம் நடைபெறலாம், என்றாலும், எல்லாரிடத்திலும் ஜனநாயக உணர்ச்சி ததும்பிக் கொண்டிருக்கிறதென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. ஜனநாயக ஆட்சி என்பதற்கு தற்போது பிரிட்டிஷார் "ஜனநாயகம்" என்ற பெயரால் புரிந்து வரும் ஆட்சியை யான் கூறுவதாக நினைக்கவேண்டாம். மனிதவர்க்கத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் சமமாக நடத்தப்படவும் வேண்டும், யாவரையும் சமமாகவே நோக்கவும் வேண்டும். இதற்குத்தான் ஜனநாயக ஆட்சி யென்று பெயர். இவ்வித ஆட்சிக்கு மற்றவர்கள் குடிஅரசு என்றோ, பொதுவுடமை யென்றோ எந்தப் பெயரைக் கூறிக்கொண்டாலும் எனக்கெவ்வித ஆக்ஷேபணையும் இல்லை.

மனித வர்க்கத்தை அடிமைப்படுத்துவதற்கு முக்கிய உணச்சியாக இருப்பது உயர்வுதாழ்வு என்ற உணர்ச்சிதான். ஒரு வருக்கத்தார் தங்களை உயர்ந்தவரென்றும், மற்றவரை தாழ்ந்தவரென்றும் கருதுவதுதான் இவ் வுணர்ச்சியை வளர்ப்பதன் பொருளாகும். எனவே, காங்கிரஸ் தனது லக்ஷியம் "பூரண சுயராஜ்யம்தான்" என்பதாக முடிவுசெய்தபோது 'காங்கிரஸ் மதவைராக்கியம், முதலாளித்துவம் என்பனவைகளைவிட்டு

ஒதுங்கி "மனிதத்துவம்" என்ற கொள்கையின் படி நடக்குமா? என்பதையும், "இந்தியாவில் பிறந்தவர்கள்" இக் கொள்கையைச் சரிவர அமல் நடத்துவார்களா? என்பதைப்பற்றியும் சிந்தித்து நாம் ஒரு முடிவுக்கு வருவதற்குள்ளாகவே காங்கிரஸுக்கும் பூரண சுயராஜ்யத்தின் உண்மையான அம்சத்திற்கும் எவ்விதச் சம்பந்தமுமில்லை" என்பதைக் காங்கிரஸ் தனது போக்கின் மூலம் காட்டிக்கொண்டது நம் கண் முன் நிற்கின்றது. பலநூற்றாண்டுகளாக அடிமை வாழ்வில் இருந்துவந்த ஒரு சமூகம் சுயேச்சை யுணர்ச்சி கொண்டாலும், அதன் சுயேச்சை யுணர்ச்சியில் அடிமைத்தனத்தின் வாடை இல்லாமலிருக்க முடியாது.

காங்கிரஸின் ஆரம்ப காலத்தையோ, மத்திய காலத்தையோபற்றிப் பேசவிரும்பவில்லை. அவ்வாறு பேசுவதற்கு இது சமயமுமல்ல, பொருத்தமுமல்ல. ஏனெனில், அக் காலங்கள் காங்கிரஸின் "முயற்சியின் காலங்களாக" இருந்தன. முயற்சிக்குப்பின் பயன்பெறும் காலத்தை அதாவது காங்கிரஸின் தற்போதைய நிலைமையைப்பற்றித்தான் சிறிதுகூற விரும்புகிறேன்.

தற்போது காங்கிரஸ் என்ற நரம்பில் ரத்தத்தைப்போல் ஓடிக்கொண்டிருப்பது ஒரே ஒருவர்தான் என்பதையும், அவருக்கு காங்கிரஸ் "சர்வாதிகார" அந்தஸ்தைக் கிரியாம்சையில் கொடுத்துவைத்திருக்கிறது என்பதையும் ஒருவரும் மறுக்கமுடியாது. அவர் காங்கிரஸில் தீவிரமாகப் பிரவேசிப்பதற்கு முன் காங்கிரஸ் எவ்வாறிருந்தது என்பதை நாம் கவனிக்க வேண்டியதில்லை. தற்போதுள்ள காங்கிரஸ் அவரது சப்தமாகவே, கருத்தாகவே, நோக்கமாகவே இருக்கிறது. அவர் இஷ்டப்படியே எல்லாக் காரியத்தையும் செய்கிறது. ஆகவே, நாம் அந்த ஒருவரின் அதாவது காந்திஜீயின் மனப்பான்மையை தெரிந்துகொண்டால் காங்கிரஸின் நிலைமையை சுலபமாக உணர்ந்து கொள்ள முடியும்.

"பூரண சுயராஜ்யம்" என்ற பதம் கூட காந்திஜீ உற்பத்தி செய்த பதமாக இருக்கலாம். அப்பதத்திற்கு அவர் கூறியுள்ள வியாக்யானத்திலிருந்து "பரிபூரணமான சுயேச்சை" என்றுதான் தெரிய வருகிறது. என்றாலும், "பூரண" என்ற வார்த்தைக்கு அவர் கிரியாம்சையில் காண்பித்துவரும் வியாக்யானம் அல்லது உருவம் மிகவும் குறைவானதாகவே இருக்கிறது. எவ்விதத்திலும் அது "பரிபூரணமான" தாக இருக்க முடியாது. ஆகவே, இதனை மத வைராக்கியம் என்று சொல்ல முடியும். இன்னும் தெளிவாகச் சொல்வதாயின் "ஹிந்து ராஜ்ஜியம்" என்றும் சொல்லலாம்.

நாம் ஒருவரது மனத்தினுள்ளிருப்பதை உணர்ந்து கொள்ள முடியாது. அல்லாஹுத்தஆலா ஒருவனுக்குத்தான் அந்த உரிமையும் சக்தியுமிருக்கிறது. ஆதலால், காந்தியின் மனப்பான்மை இந்தியாவில் கலப்பற்ற ஹிந்துராஜ்யத்தை ஸ்தாபிப்பதுதான் என்று நாம் உறுதியாகக் கூற முடியாதாயினும், ஒருவரது சொல், செயல் ஆகியவைகளைக் கவனித்து, அவரது போக்கு அல்லது மனப்பான்மை இன்னதுதான் என யூகித்துத் தெரிந்துகொள்ள முடியும். முதலாவது காந்தி பக்கா விக்கிரக ஆராதனைக்காரர். வேறு பல மதங்களுக்கு ஹிந்து மதத்தின்பால் இருக்கிற வித்தியாசங்களைச் சகித்துக்கொள்ளக்கூடிய உயர்ந்த, உன்னதமான தன்மை அவரிடம் இல்லை. இரண்டாவதாக அவர் முதலாளி வர்க்கத்தை ஆதரிப்பவர். அவரது சொந்த வாழ்க்கை முறை ரிஷிகளது வாழ்க்கை முறை என்று வைத்துக் கொண்டாலும், பெரும் பெரும் லக்ஷாதிபதிகளது வாழ்க்கை அவரது வாழ்க்கையின் முன் நிற்க முடியாது.

காந்திஜியின் சர்வாதிகாரப் பதவி காங்கிரஸின்பால் தேசத்திலுள்ள பல வகுப்பினருக்கும் அவநம்பிக்கையை உண்டுபண்ணிவிட்டது. பற்பல வகுப்பினருடைய நம்பிக்கையையும் பெற்று, தலைமைப் பதவியை அடைந்து கொள்ளக்கூடிய, அந்தரங்க சுத்தியான, அகந்தெளிந்த தன்மை காங்கிரஸ் ஆட்சியில் இல்லை. தேசத்தின் புனருத்தாரணத்திற்காக, தேசத்தைச் சீர்திருத்துவதற்காக காந்திஜீ அதிக முயற்சி செய்தார் என்பது உண்மை. ஆனால், அவரது சீர்திருத்தமும், புனருத்தாரணமும், முயற்சியும் எந்த வகுப்பை அவர் சேர்ந்திருக்கிறாரோ அந்த வகுப்புக்குள் மட்டிலுமே இருந்து வந்திருக்கின்றன. அவரது ஹரிஜன இயக்கத்தினால் ஹிந்து சமூகத்தின் பெரும்பான்மைப் பதவியைப் பலப்படுத்தி ஹிந்து சமூகத்திற்கு நன்மை செய்வித்திருக்கலாம். ஆனால், இதனால் தேசத்திற்கு எவ்வித நன்மையுமில்லை. காந்திஜீயின் ஸ்தானத்தில் மதவைராக்கியமோ, முதலாளிவர்க்கத்தாரின் அபிமானமோ இல்லாத வேறு ஒரு தலைவர் இருந்தால், அவர் எல்லாருக்கும் முதலில் ஹிந்து சமூகத்திற்கும்,

முஸ்லிம் சமூகத்திற்கு மிடையிலிருக்கிற வேற்றுமையை ஒழித்திருப்பார். இப்படிச்செய்வது ஹரிஜன இயக்கத்தைப் பார்க்கினும் மிக மிக அவசியமானது. என்றாலும், காந்திஜீ கடுமையான, பக்கா ஹிந்துவாக இருப்பதால் முஸ்லிம்களுடன் சமமாக இருந்து உணவருந்துவதையுங் கூட நல்லதெனக் கருதுகிறாரில்லை. முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த ஹிந்துக்களுடன் பிணங்கிக் கொள்வது பொருத்தமன்று என நினைக்கிறார். ஆதலால், அவர் உயர்வு தாழ்வு என்ற பாகுபாட்டை ஒழிக்க முன் வந்ததாகக் கருதப்பட்டாலும் முஸ்லிம்களும் ஹிந்து மதத்திலுள்ள அநேக பிரிவினர்களும் தீண்டப்படாதவரைப் போல் இன்னும் ஒதுக்கி வைக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். எவ்வாறாயினும், காந்திஜீ பூரண சுயராஜ்யம் கோருகிறார். என்றாலும், அதனை அடைவதற்காக அவர் ஏற்படுத்தியுள்ள மார்க்கம் குடியேற்ற நாட்டந்தஸ்திற்கு மேல் கொண்டு போவதாக இல்லை. எனவே, பூரண சுயேச்சை என்பதைக் கொஞ்சமும் தெரிந்து கொள்ளாமலிருக்கிற ஹிந்து சமூகத்திலிருந்து, இதனைப் பார்க்கினும் அதிகம் எதிர் பார்க்க முடியாது என்பது உண்மை.

இனி, காங்கிரஸ் வாதிகள் மந்திரிப்பதவியை ஏற்றுக்கொண்டபின், என்னவாயிற்று என்பதைக் கவனிப்போம். காங்கிரஸ் அரசாங்கத்தால் பொதுஜனங்களுக் கேற்பட்ட நன்மை யாது என்பதைச் சிந்திப்போம். உலகிலுள்ள மற்றெல்லாப் பொருளுக்கும் இருப்பதுபோல், அரசாங்கத்திற்கும் உட்புறம், வெளிப்புறம் என்று இரண்டு அம்சங்களிருக்கின்றன. வெளிப்புறத்தைப்பற்றி நாம் பேசுவதே வீண். ஏனெனில், சுத்தம் என்ற விஷயத்தில் ஹிந்து சமூகம் கொண்டுள்ள கருத்து, முஸ்லிம்களாகிய நாம் கொண்டுள்ள கருத்துக்கு முற்றிலும் மாறானது. ஆதலின், காங்கிரஸ் அரசாங்கத்தின் காரியாலயங்களில் வெளித் தோற்றத்தில் காணப்படும் ஒழுங்கின்மை, அசுத்தம், ஆகியவைகள் நாற்றமெடுத்திருப்பனவேபோல் காணப்படுகின்றன. இதனை முஸ்லிம்கள் கண்டு பிரமிக்கவோ திடுக்கிடவோ வேண்டியதில்லை. ஆதலால், வெளித்தோற்றத்தை நாம் விட்டு விட்டு உள்தோற்றத்தை மட்டிலும் எடுத்துக்கொள்வோம். அதுவும் போற்றத் தகுந்ததாக இல்லை. ஹிந்துக்களின் அசல் கருத்து என்ன? காந்திஜீயின் தலைமைத் தனத்தில் எவ்விதமான மனப்பான்மை வளர்ந்து வருகிறது என்ற விஷயம் நமக்கு இதில் வெளியாகிறது.

காங்கிரஸ் ஆட்சி நடைபெறும் மாகாணங்களில் ஹிந்துக்களின் தைரியம் வெகுதூரத்திற்கு மேலோங்கி விட்டது என்பதில் சந்தேகமில்லை. முஸ்லிம்களை அவர்கள் தொந்தரை செய்தால், ஹிம்சித்தால் அரசாங்கங்கள் தங்களுக்குத்தான் உதவிபுரியும் என்று ஹிந்துக்கள் கருதுகின்றனர். ஆனால், ஹிந்து சமூகத்தைத் தான் சர்க்கார் ஆதரிக்கும், இதர சமூகத்தை ஆதரிக்காது என்று உத்தியோக முறையில் அவர்கள் அறிக்கை வெளியிடவில்லை. ஆயினும் அவர்களது செய்கையிலிருந்து இதுதான் வெளியாகிறது.

காங்கிரஸ்காரர்கள் உண்டுபண்ணிவைத்துள்ள மனப்பான்மை முஸ்லிம்களுடன் ஒற்றுமைக்குப் பதிலாக வேற்றுமைக்குரிய வழிகளையே உற்பத்தி செய்துகொண்டு போகிறது. முஸ்லிம்களது நாகரீகம், வாழ்க்கை முறை ஹிந்துக்களின் நாகரீகம் வாழ்க்கை முறை ஆகியவைகளுக்கு முற்றிலும் மாறானவை. ஆகவே, முஸ்லிம் களுக்குத் சொந்தமாகவுள்ள சமூக நாகரீகத்தை ஹிந்துக்கள் மதிக்காவிடில் இரு சமூகங்களுக்கு மிடையில் ஒற்றுமை ஏற்படுவது குதிரைக்கொம்புதான். இவ்விஷயத்தில் மிக முக்கியமான பிரசினை பாஷைதான். ஆனால், ஹிந்துக்கள் இதனை மிகச் சாமான்யமானதாக நினைப்பது துர் அதிர்ஷ்டமாகும்.

உருது ஹிந்தி ஆகிய இருபாஷைகளின் லிபியால் எழுதப்படுகிற "ஹிந்துஸ்தானி" எனும் ஒரு ஐக்கிய பாஷையை ஏற்படுத்த விரும்புவதாக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூறுகிறது. ஆனால், காங்கிரஸ் சர்க்கார்கள் இதற்குக் கூறும் கருத்து வேறாக இருக்கிறது. உதாரணத்திற்காக ஐக்கிய மாகாணத்தை எடுத்துக்கொள்வோம். அங்கு ஒரு சட்டத்தை அல்லது ஒரு ரிக்கார்டை ஆங்கிலத்திலிருந்து ஹிந்துஸ்தானி பாஷையில் மொழி பெயர்த்தால் உருதுவில் வேறாகவும், ஹிந்தியில் வேறாகவும் மொழிபெயர்க்கப்படுகிறது. இவ்விரு பாஷைகளுக்கு மிடையில், எழுத்தில் மட்டும் வித்தியாசமில்லாமல் வார்த்தைகளிலும் மிகுந்த வித்தியாசமிருக்கிறது. அதாவது இவ்விரு மொழி பெயர்ப்புகளையும் பார்க்கும்போது இவ்விரு பாஷைகளும் "ஹிந்துஸ்தானி" பாஷை என்று உணரப்படாமல் ஒன்றுக் கொன்று மாறுபட்ட

34

இரண்டு வேறு பாஷைகள் என்று தோன்றுகிறது. எனவே ஐக்கிய பாஷை ஏற்படுத்துவதற்கு இது தான் முறையா?

ஹிந்துஸ்தானி என்ற ஐக்கிய பாஷை ஒவ்வொருவரும் சுலபமாகத் தெரிந்து கொள்ளக்கூடிய முறையில் இருக்கவேண்டும். அப்பாஷையில் அறபி வார்த்தை இருக்கிறதா? பார்ஸீ வார்த்தை இருக்கிறதா? சமஸ்கிருத வார்த்தை இருக்கிறதா? இங்கிலீஷ் வார்த்தை இருக்கிறதா? என்பதைக் கவனிக்காமல், சாமானியர் வாசகத்தைச் சுலபமாக உணர்ந்து கொள்ள முடியுமா என்பதை மட்டும் கவனிக்கவேண்டும். ஆனால், இம்மாகாணத்து சர்க்கார் அறபி அல்லது பார்ஸீ பாஷையிலுள்ள பதம் எவ்வளவு சுலபமானதாவும், இந்தியர் யாவரும் புரிந்து கொள்ள கூடியதாகவும், இந்தியரின் பழக்கத்தில் வந்ததகாவும் இருந்தாலும் சரியே அப்பதங்கள் அறபி பார்ஸீ பாஷைகளைச் சேர்ந்ததாக இருந்தால் அதனை அகற்றிவிட வேண்டும் என்பதையே முறையாகக் கொண்டிருக்கிறது.

தற்போது அம்மாகாணத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சட்ட புத்தகங்களைக் கிராமவாசிகளெல்லாம் படித்திருக்கிறார்கள். "ஸாக்கித்துல்மில்கிய்யத்'' என்ற பதங்கள் அறபிப் பதங்கள். இப்பதங்களும் கூட சட்டப்புத்தகத்தில் பதிவாகி எங்கும் பரவி விட்டது. "உரிமை நீங்கிவிடும், பாத்தியம் நீங்கிவிடும்'' என்பது இப்பதங்களின் கருத்து. அமலில், பழக்கத்தில் வந்து யாவருக்கும் எளிதில் புரியப்படுவனவாக ஆகிவிட்ட இப்பதங்களை எல்லாம் அகற்றிவிடும் காரியத்தில் யூ. பி. சர்க்கார் முனைந்திருக்கிறது. இப்பதங்களுக்கு பதிலாக ஏற்படுத்தப்படும் பதங்கள் பொருத்தமான பதங்களாக இருக்கமாட்டா என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. இவ்வாறு அநேக வார்த்தைகளை திருத்தியமைக்க முனைந்திருக்கின்றனர்.

இம்மாகாணத்திலுள்ள மந்திரிச் சபையைச் சேர்ந்த ஒரு அங்கத்தினர், ஐக்கிய மாகாணத்திற்கு தற்போது இருந்து வருகிற "ஸோபயே முத்தஹிதா" என்ற பதத்தை அகற்றிவிட்டு, வேறு பெயர் வைக்கவேண்டும் என்று பிரேரணை செய்தார். தாங்களே இதற்குத் தகுந்த வேறு பெயரைக் கூறுங்கள் என்று பதில் கூறப்பட்டது. அவர் அதிக நேரம் சிந்தித்துப் பார்த்துவிட்டு "ஸோபயே முத்தஹிதா'' என்பதற்குப் பதிலாக ''ஜுட்ஸோபா'' என்ற பெயரைக் கொடுப்பது மிகப் பொருத்தமாகத் தமக்குத் தோன்றுகிறது என்று கூறினர். எனவே, மிகமிகப் பழக்கத்தில் வந்து, சர்வ சாதாரணமாக யாவருக்கும் விளங்கக் கூடியதாகவும், இந்தியப் பாஷைகளில் கலந்துவிட்டதாகவும் இருக்கிற ஸோபயே முத்தஹிதா, ஜமீமா, நாபிஸ் போன்ற பதங்களையும்கூட அகற்றிவிடவேண்டும் என்று தோன்றிய மனப்பான்மையைப் பற்றித்தான் இப்பொழுது நாம் கவனிக்கவேண்டும்.

இவ்விஷயம் மந்திரி சபையில் அங்கத்தினராக இருக்கும், காங்கிரஸ் தலைவர்களாக வுள்ளவர்களின் மனப்பான்மையை விளக்குவதாக இருக்கிறது. இனி, காங்கிரஸ் மந்திரி சபை ஏற்படுவதற்கு முன் ஒரு காரியத்தைக் குறித்து ஜில்லா மாஜிஸ்டிரேட்டின் ரிப்போர்டை ஆதாரமாகக் கூறினல் "அந்த ரிப்போர்ட்டுக்கு என்ன மதிப்பிருக்கிறது; அதனை நம்ப முடியாது" என்று காங்கிரஸ் வாதிகள் கூறி வந்தனர். இப்பொழுது நாட்டிலுள்ள குழப்பத்தையும், ஹிந்துக்கள் செய்யும் அக்கிரமத்தையும் மறைக்க வேண்டிய அவசிய மிருப்பதால், அதே ஜில்லா மாஜிஸ்டிரேட்களின் ரிப்போர்ட்கள்தான் காங்கிரஸ் கக்ஷியாருக்கு ஆதாரமாக இருக்கிறது. இத்தியாதி காரியங்களைக் கவனிக்கும்போது ஹிந்துக்கள் முஸ்லிம்களை முற்றிலும் ஒதுக்கிவிட்டு ஹிந்து ராஜ்யத்தைஸ்தாபிக்கவும், இந்தியாவில் ஹிந்துக்கள் மட்டிலும் தான் உயிருடன் வாழ உரிமையுள்ளவர்கள் என்றும் விரும்புகிறார்கள் என்பது தெரிகிறது. ஹிந்து மகாசபைக்கும் காங்கிரஸுக்கும் ஏதேனும் வித்தியாசம் இருக்கிறதா என்று பார்த்தால் ஹிந்து மகா சபையினர் முஸ்லிம்களைப் பகிரங்கமாக எதிர்த்து வெறுக்கின்றனர். காங்கிரஸ் வாதிகள் கள்ளத்தனமாக ஒடுக்குகின்றனர் என்று நன்கு தெரிய வருகிறது.

ஆகவே, காங்கிரஸ்காரர் உற்பத்தி செய்யும் ஹிந்துஸ்தானி பாஷை என்பதும், அவர்கள் கூறும் பூரண சுயராஜ்யம் என்பதும் முஸ்லிம்களை ஒழிக்கச் செய்யும் ஏற்பாடுகளேயாகும். ஆதலால், முஸ்லிம்கள் முஸ்லிம் லீகில் சேர்ந்து அதன் கட்டளைப்படி நடந்து முஸ்லிம்களது பாஷை, மதம், ஆசாரம், கலை ஆகியவைகளைப் பாதுகாத்து இந்தியாவில் இந்தியரின் ஆட்சியை ஏற்படுத்த முயலுவார்களாக.

# தா. இ. ஹாபிஜின் கபடசூக்ஷி

(மௌலானா அபுல் ஹஸன் சாஹிப் மத்ராஸி வரைவது)

நெல்லிக்குப்பம் வாசியும், தா. இ. மாஜி ஆசிரியரும், தற்சமயம் பினங்கு தேசநேசனில் ஹாபீஸ்பாகவி என்ற பெயரால் அநேக கட்டுரைகள் வெளியிட்டு வருபவருமான முகம்மது யூசுப்சாஹிபை தமிழ் உலகம் நன்கறியும். இவர் தாருல் இஸ்லாத்தில் சேர்ந்து வேலை செய்து வந்தார். சிலசமயத்தில் அதற்கு ஏகதேச ஆசிரியராகவும், மற்றும் சிலகால் வேறு விதமாகவும் இருந்து வந்தார். தா. இ. புரிந்து வந்த காதியானி பிரசாரத்திற்கு பக்கபலமாக இருந்து ஆதாவும், ஆக்கமும், ஊக்கமும் அளித்து வந்தார். இதனால் பொதுமக்களிடையே அநேக குழப்பங்களேற்பட்டன. சிலர் அறியாத் தனத்தால் இவர்களின் மார்க்க முரணான கொள்கையில் சிக்குண்டனர். அறிவாளிகளில் பலர் கிளர்ச்சி செய்தனர். பலர், அவர் கல்வி பயின்ற வேலூர் மத்ரஸயே பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் அறபி கல்லூரியின் தலைவருக்கு விஷயத்தை தெரியப்படுத்திக் கொண்டனர். மேன்மை பொருந்திய அம் மத்ரஸாவின் தலைவரும் உஸ்தாது மார்களும் அவரை அழைத்து புத்திமதி கூறினார்கள். இவரோ அப்புத்திமதிகளையெல்லாம் ஏற்று நடக்காது அதே தொழிலில் ஈடுபட்ட வண்ணமேயிருந்து வந்தார். அம்மகான்களின் ஹிதோபதேசங்களெல்லாம் செவிடன்காதில் ஊதிய சங்கோசைக்கொப்பாக ஆகி விட்டது. எனவே, மத்ரஸாவின் தலைவரும் நாஜிருமான மேன்மை தங்கிய ஆலா ஹஸ்ரத் அவர்கள் இவருக்களித்திருந்த மௌலவி 'ஸனது நாமா' வை றத்து செய்து விட்டார்கள். இதனையும் கூட பொருட்படுத்தாது மேலும் மேலும் அதிலேயே யீடுபட்டு வேலைசெய்து வந்த இவர், முன்னொரு முறை தா. இ. ஆபீஸிலிருந்து வெளிவந்து, தா. இ. வின் கொள்கைகளெல்லாம் தமக்கு பிடிக்காமல் வெளிவந்துவிட்டதாக பலரிடமும் சொல்லித் திரிந்துவிட்டு சில காலத்திற்குபின் அதே ஆபீஸில் சாதாரண தோரணையில் புகுந்து பழைய பல்லவியையே பாடிக்கொண்டிருந்தார்.

பிறகு இதுகாலை தா. இ. கொள்கைகள் தனக்கு பிடிக்கவில்லை யென்றும், எவ்வாறாகிலும் அதன் கொள்கைகளை திருத்தியமைத்துவிடலாமென்று தாம் இதுகாலம்வரை அத்துடன் ஒத்துழைத்து வந்ததாகவும் இதுபொழுது எவ்வகையிலும் அது சரியான வழியிற் செல்லாதென்பதை நன்கு தெரிந்து கொண்டதனால், அதை விட்டு தாம் விலகிக் கொண்டதாகவும் பலரிடமும் சொல்லிக்கொண்டிருந்தார். இத் துறையில் அவர் சிங்கப்பூர், மலாயா முதலிய தேசங்களுக்குச் சென்று தனியாக ஓர் வாராந்திரப் பத்திரிகை நடத்த வேண்டுமென்று பலரிடமும் உதவி தேடியதாகவும், இவருடைய கோரிக்கையை யாவரும் மறுத்துவிட்டனரென்றும் தெரிகிறது. அதன்பின் இவர் பினங்கை யடைந்து அங்குள்ள "தேச நேசன்" பத்திரிகையிலமர்ந்து அநேக கட்டுரைகள் வரைந்து வருவதுடன் தாருல் இஸ்லாத்தின் கொள்கைகள் தனக்கு பிடித்தமில்லாததால் அதைவிட்டு விலகி தனியாக ஒரு வாரப் பத்திரிகை நடத்தவேண்டுமென்னும் கருத்தோடு இவ்விடம் வந்து தேசநேசனில் அமர்ந்திருப்பதாகவும் ஒரு வேண்டுகோள் வெளியாக்கினார்.

ஆனால் 3—8—38-ல் வெளியான தேசநேசனைப் பார்க்கும்போது இவர் வெளியிட்ட அறிக்கையும் "தவ்பா" நாமாவும், மக்களிடையே கூறி வந்ததும் வெறும் 'ஹம்பக்' என்றே தெரிகிறது. ஏனெனில், சென்னையிலிருந்து வெளிவரும் "தாருல் இஸ்லாம், தேச சேவகன்" இவைகளில் வெளியான சாதாரண விஷயங்களைக்கூட தேச நேசனில் வெளியிட்டு இன்ன பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டதென்பதற்காக தா. இ, தே. சே. என்று அடையாளமிட்டு அவைகள் மீது குறிப்பும் எழுதியிருக்கிறார். இதிலிருந்து அவர் தா. இ, தே. சே. இவைகளின் பிரசார ஏஜண்டாக அங்கு சென்றிருக்கிறாரோ வென யூகிக்க வேண்டியிருக்கிறது.

தாருல் இஸ்லாமோ ஏற்கனவே காதியானிப் பிரசாரம்செய்து வந்தது பின்னர் அதனை விடுத்து காங்கிரஸ்பிரசாரத்தி லீடுபட்டு முஸ்லிம் லீக்கையும் அதன் ஒப்பற்ற தலைவர்களையும் தாறுமாறாக தாக்க முற்பட்டது. இதனால் பொதுவாய் எல்லா முஸ்லிம்களும் குறிப்பாய் சிங்கப்பூர், பினங்கு, மலாயா முதலிய இடங்களில் வதியும் முஸ்லிம்களும் அப்பத்திரிகையை பகிஷ்கரித்து விட்டனர். சிறிது காலத்திற்கு முன் சிங்கப்பூரில் ஆலிஜனாப் ஆதம் செ. ஹாஜி முகம்மது இப்ராஹீம் சாஹிப் அவர்களின் தலைமையில் சிங்கப்பூர் முஸ்லிம்களின் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் தாருல் இஸ்லாத்தை பஹிஷ்கரித்து தீர்மானம் நிறைவேற்றி அத்தீர்மானங்களை துண்டுப் பிரசுரமாக அச்சிட்டு எங்கும் விநியோகித்தனர். அதிலிருந்து தாருல் இஸ்லாம் பஹிஷ்காரம் வலுவடைந்து விட்டது, இதனால் தா. இ. நிருவாக முறையில் சிக்கலேற்படுவதை யுன்னி தந்திரமாகப் பிரசாரம் புரிய மாறுவேஷம் பூண்டு ஹாபிஜ் அந்நாட்டுக்கு சென்றிருக்கின்றார் போலும். அவரோ தாருல் இஸ்லாத்தை வெறுத்துவிட்டதாக வரைந்துவிட்டு, இதுபொழுது தா. இ. வின் கட்டுரைகளை வெகு தாராளமாய் கையாண்டு புகழுரையும் பாட முற்பட்டுவிட்டார். முக்கிய விஷயங்களை வேறு பத்திரிகைகளிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கும் நோக்கம் கொண்டு அவர் பிரசுரித்து இருந்தால், மகா மகா முக்கியமானதும், முஸ்லிம் மக்களின் அவசியத்திற்கு வேண்டற் பாலதுமான அநேக விஷயங்கள் ஸை. இ. முதலிய முஸ்லிம்களுக்கு உகப்பான பத்திரிகைகளிலிருந்து எடுத்துப் பிரசுரித்து அதன்மீது இவர் குறிப்பும் எழுதி இருக்கலாம். அப்படியின்றி, முஸலிம்களால் பகிஷ்கரிக்கப்பட்ட தா. இ, தே. சே. இவைகளிலிருந்து மட்டும் விஷயங்களை எடுத்துப் பிரசுரித்து வருவதென்றால் அவருடைய அந்தரங்க நோக்கம் இன்னதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கா நிற்கின்றதன்றோ?

மேலும் இந்தப் பத்திரிகையில் பி. எ. மஜீது என்பவர் பெயரால் ஒரு கட்டுரை வெளி வந்திருக்கிறது. அக்கட்டுரையின் நோக்கம் வெளித் தோற்றத்தில் முஸ்லிம்களுக்குள் ஒற்றுமை வேண்டும் என்பதாக காணப்படுகிறது. அவ் ஒற்றுமை வேண்டும் என்பதை யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை. முஸ்லிம்கள் எல்லாரும் அதே கூக்குரல்தான் போட்டு வருகின்றனர். அவ்வொற்றுமை வேண்டுமென்பதை நானும் முழு மனதுடன் ஆதரிக்கின்றேன். ஆனால் அதில் தவறான விஷயங்களை புகுத்தியிருப்பதை தான் நான் ஆட்சேபிக்கிறேன். அதிலுள்ள ஆட்சேபகரமான பகுதியைமட்டும் நேயர்களின் பார்வைக்கு அப்படியே தருகிறேன்.

"கண்ணியமிக்க முஸ்லிம் சகோதரர்காள்! நன்றாய் ஆலோசனை செய்து பாருங்கள்! எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் காலத்திற்குப் பின் எத்தனையோ மதப் பிரிவுகள் உண்டாயிருக்கின்றன.

நமது நபிகள் திலகம் அவர்களும் இஸ்லாத்தில் 72 பிரிவுகள் ஏற்படும், அதில் ஒரு வகுப்பாரே என்னைக் கடைபிடிக்கும் உண்மை முஸ்லிம்கள் எனக் கூறிப் போந்தார்கள். அவ் வாக்கியத்தையே சதா தங்களுக்கு சாதகமாக வைத்து ஷியா-சுன்னி, அஹ்லஹதீது, வஹ்ஹாபி, அஹ்மதி இன்னும் இவைபோன்ற பற்பல பிரிவாரும் விவாதிக்கின்றனர். ஆகவே 1400 ஆண்டுகளாகியும் இதில் யார் சரியான முஸ்லிம்கள் என்பதை இவ்வுலகம் கண்டுகொள்ள முடியவில்லை. (இவர்களுக்கிடையே சில்லரையான விஷயங்களில் அபிப்பிராய பேதங்கள் பல விருப்பினும், இவர்களெல்லாம் முஸ்லிம்களாவே யிருக்கின்றனர் என்பதை நண்பர் உணர வேண்டும். ஹாபிஜ் பாக்கவீ.)"

இக்கூற்றுக்கள் தாருல் இஸ்லாத்தின் பழம் பல்லவிகளாகும். இதற்கு எத்தனையோ முறை மறுப்பெழுதப்பட்டுப் போயிற்றென்பதும் நண்பர்கட்கு தெரியும். இதுபொழுது மலாய் நாட்டில் தமது மாயவலையை வீசுவதற்கு தமது குப்பையை கிளற ஹாபிஜ் முன்வந்திருக்கிறார் போலும்! அக்கட்டுரையில் இஸ்லாத்தில் 72 பிரிவுகள் ஏற்படுமென்று நபிகள் திலகம் அவர்கள் அறிவித்தாக குறிப்பிடுகின்றார்! இது அபாண்டப் பொய்யாகும். இவ்வாறு எந்த ஹதீதுகளிலும் கிடையாதென்பதை பொது மக்களும் ஹாபிஜூம் உணரவேண்டும். இது சம்பந்தமாக வந்திருக்கும் ஹதீதுகளில் இவர் கூறிய இஸ்லாம் என்னும் பதமும், 72 என்ற பதமும் காணப்படவில்லை.

ஹதீதில் கூறப்பட்ட பிரிவினைக் கூட்டங்களில் அஹ்லஹதீது அஹ்மதீகள் சம்பந்தப்பட்டவர்களன்று. காதியானீ, அஹ்மதீ வகுப்பினர் காபிர்களென்று சுன்னத் வல்ஜமாஅத் உலமாக்களால் மார்க்கத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நேயர்களறிவர். எனவே, நபி பெருமானார் (ஸல்.) அவர்களது உம்மத்தில் சேராத, இடையில் சமீபத்திலேற்பட்ட வழி

கெட்ட காபிர் கூட்டத்தினரை இதில் புகுத்தியது ஹாபிஜின் தந்திரமான காதியானிப் பிரசாரத்தை தெற்றென விளக்கிக் காட்டுகிறதன்றோ?

மேலும் இக்கட்டுரையில், "சுமார் 1400 ஆண்டுகளாகியும் இதில் யார் சரியான முஸ்லிம்களென்பதை இவ்வுலகம் கண்டு கொள்ள முடியவில்லை" என ஹாபிஜ் வரைகின்றார். ஐயோ! பாவம் இவருக்கு இவ்விஷயம் இன்னும் தெரியாதிருப்பதால் இத்தோஷத்தை உலகத்தின்மீது சுமத்துகின்றார். எனவே, இவருடைய நிலை இன்னதென்பதைக் கூட இன்னும் இவர் விளங்கிக் கொள்ளாமலேதான் இருக்கின்றார் என்பது இதிலிருந்து புலனாகின்றது. ஆயிரத்து நானூறு வருஷங்களென்ன? ஆதிகால முதற்கொண்டே இன்னார் உண்மை முஸ்லிம்கள், இன்னார் வழிகெட்ட கூட்டத்தார்கள், இவர்களுடைய நிலைமை இன்னது? என்பனவற்றைப் பற்றி தெள்ளத் தெளிய சிறிய சிறிய மார்க்க கிதாபுகளிலும் விவரிக்கப்பட்டுப் போயிருப்பதற்கேற்ப ஸுன்னத் வல்ஜமா அத்தார்களின் அனுஷ்டானமும் இருந்து வருகிறது.

மேலும் அக்கட்டுரையில், "ஷியா சுன்னி அஹ்ல ஹதீது அஹ்மதி இவர்களுக்கிடையே சில்லரையான விஷயங்களில் அபிப்பிராயபேதங்கள் பலவிருப்பினும் இவர்களெல்லம் முஸ்லிம்களாகவே இருக்கின்றனர் என்பதை நண்பர் உணர வேண்டும்" என, ஹாபிஜ் வரைகின்றார். என்னேவிபரீதம்! ஹதீதில் இஸ்லாத்தில் 72 பிரிவுகள் ஏற்படுமென்று வந்திருப்பதாக வரைந்தார். முதலாவது அவ்வாறு 72 என்று எந்த ஹதீதிலாகிலும் வந்திருக்கிறதா வென்பதை ருசுப்பிக்க ஹாபிஜ் கடமைப்பட்டுள்ளார்.

விவாவத்திற்காக அவர் கூறியபடியே ஹதீது வந்திருப்பதாக வைத்துக்கொண்டாலும், அந்த ஹதீதில், ஒரு வகுப்பாரே என்னை கடை பிடிக்கும் உண்மை முஸ்லிம்களென நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் கூறியிருப்பதாக ஹாபிஜ் வரைந்து, இதற்கு வியாக்கியானம் எழுதும் போது இக்கூட்டத்தினர்களெல்லாம் முஸ்லிம்களாகவே இருக்கின்றனரெனக் கூறுகின்றார். ஹதீதுக்கும் இவருடைய வியாக்யானத்துக்கும் கருத்துக்கள் எவ்வளவு நேர்முரணாக இருக்கின்றனவென்பதை நேயர்கள் உணர வேண்டும். ஆகவே, நமது பெருமானார் (ஸல்.) அவர்கள் நீக்கி தள்ளியவர்களும், நரகவாதிகளுமான 72 கூட்டத்தினரை மட்டும் நண்பர் ஹாபிஜ் எடுத்துக்கொண்டு, உண்மை முஸ்லிம்களும் சுவர்க்கவாதிகளுமான ஒரு கூட்டத்தினரை விட்டுவிட்டதைப் பார்த்தால், இவர் வழக்கம்போல் வழி கெட்ட கூட்டத்தாருக்கே வக்காலத்து வாங்க முற்பட்டு விட்டார்; இதனால் தான் இவர் கண்ணுக்கு முக்தி பெறும் ஒரு கூட்டத்தினர் விஷயம் புலனாகவில்லை எனத் தெரிகிறது.

நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் மூலம் அறிவிக்கப்பட்ட ஹதீதில், 73 கூட்டத்தாரில் ஒரு கூட்டத்தார் சுவர்க்கவாதி, மற்றக் கூட்டத்தினரெல்லாம் நரகவாதிகளென்று கூறப்பட்டிருக்கும் நிலைமையில், இதற்கு மாற்றமாய் அந்த 72 கூட்டத்தினரை மட்டும் குறிப்பிடுகிறார். இவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஹதீதுக்கு மாற்றமாய்க் கூறும் இட்டுக்கட்டு தானென்னே?

ஆகவே "தாருல் இஸ்லாம் பத்திரிகையின் கொள்கை பிடிக்கவில்லை, மலாயாவிற்கு வந்து விட்டேன்" என்று ஹாபிஜ் கூறுவது வெறும் ஹம்பக்கும் மக்களை ஏமாற்றுவது மாகும் என்பது நன்கு புலனாய் விட்டதன்றோ?

மேலும், பிரஸ்தாப வியாசத்தில், மேற்கூறிய பற்பல வகுப்பாருள் இஸ்லாத்தின் அடிப்படையான கோள்கைகளில் வித்தியாசமே கிடையாது" என ஹாபிஜ் வரைகின்றார். காதியானிகளுக்கும் முஸ்லிம்களுக்கும் மூலக் கொள்கைகளில் அனந்த வித்தியாசங்களுண்டென்பது உலகப்பிரசித்தம். தவிர ஷியா-சுன்னி விஷயத்தையும் கவனியுங்கள். நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களுடைய தோழர்களான சஹாபாக்கள் மேன்மை பொருந்தியவர்கள் என்பது வெளிப்படை. ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்திக் (ரலி.) அவர்களை அல்லாஹுதஆலா குர்ஆனில் போற்றிப் புகழ்ந்து பிரஸ்தாபித்துள்ளான். இவர்கள் சங்கைக்கும் புகழுக்கும் உரித்தானவர்கள் என்பது அஹ்ல ஸுன்னிகளின் நம்பிக்கையாகும். ஷியாக்களில் ஒரு பிரிவார் சஹாபாக்களைப் புகழக் கூடாது, அவர்களைத் திட்டவேண்டும் எனக் கூறுகின்றனர். இது சம்மந்தமாகவே லக்னோ முதலிய இடங்களில் சச்சரவுகளேற்பட்டு பெரும் விபரீதங்கள் நடைபெற்ற விஷயம் யாவருக்கும் தெரிந்ததே. இவ்விஷயம் 23-7-38-உ தேசநேசனிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இங்நிலைமையில் ஷியா-ஸுன்னி முதலிய வகுப்பார்களுக்குள் அடிப்படையான

கொள்கைகளில் வித்தியாசமே கிடையாதென ஹாபிஜ் கூறத் துணிவது எத்துணை தூரம் விபரீதம் என்பதை நேயர்கள் உணரவேண்டும். அவர் பழைய கொள்கைகளை யெல்லாம் விட்டு தௌபாச் செய்து விட்டதாகக் கூறுவது மக்களை ஏமாற்றக் கையாண்டு வரும் நவீன சூழ்ச்சியல்லவா?

ஏற்கனவே, தேசநேசன் காதியானியத்தை மறுத்து அநேக கட்டுரைகளைப் பிரசுரித்து வந்தது. ஸை. இ., ஹி. இ. யிலிருந்து அநேக பேருரைகளை எடுத்துக் கையாண்டும் வந்தது. இதுபொழுது அந்த தேச நேசனில் தீயக் கொள்கைகள் பிரசுரமாக துவங்கி யிருக்கின்றன. இதற்கு, அதன் ஆசிரியர் ஜனாப் ஹமீது களஞ்சியம் சுயபதி சென்றதும், ஹாபிஸ் பொறுப் பேற்றதும் ஓர் காரணமாக யிருக்கலாம். எவ்வாறாயினும், இத்தீயக் கொள்கைகள் பரவாமல் பத்திரிகை நிர்வாகிகளும், மலாய் நாட்டில் பொதுவாயும் பினாங்கு மாநகரில் குறிப்பாயும் வதியும் முஸ்லிம்களும் கவனிப்பார்களாக!

---

## மேனாட்டு யாத்திரையின் பயன்

(சென்ற ஆகஸ்டு மீ தொடர்)

சற்று நேரத்திற்கெல்லாம் தனது மனைவியுடன் ஜுபர் அங்கு வந்து சேர்ந்தான். தனது மனைவியை மோட்டாரிலேயே வைத்துவிட்டு தான் மட்டும் கீழ் இறங்கி உட்சென்று அங்குள்ள பெண்டீர்களைக் கொண்டு அவளை அழைத்து வரச் செய்யலாமெனக் கருதினான். இவன் உள்ளே சென்றவுடன் ஜுபரின் மூத்த சகோதரி 'இவனுடைய கையைப்பற்றிக் கொண்டு, அருமை சோதரா! நம்முடைய அருமை தந்தை அவர்கள் துக்ககரமான செய்தியொன்று அறிவித்தாரே அது உண்மைதானா' வென வினவினாள். ஜுபரோ வெடுவெடுத்த முகத்தோடு, "ஆம், நான் விவாகம் புரிந்து கொண்டுதான் வந்திருக்கிறேன்; விவாகம் செய்து கொள்வது பாவமான காரியமா? இந்தியா காட்டுமிராண்டிகள் வசிக்கக்கூடிய தேசமென லண்டனிலுள்ள நண்பர்கள் கூறியது சரியாகவே தானிருக்கிறது.'' என்று கூறினான். ஜுபருடைய இம்மறு மொழியைக்கண்டு பெண்டீர்களெல்லோரும் வாய்பொத்திக் கொண்டு விட்டனர். ஜுபர் மாமா (வேலைக்காரி) யிடம் மேம் சாஹிபாவை (பெண்சாதியை) அழைத்து வருமாறு சயிக்கினை பண்ணினான். இதனைத் தெரிந்துகொண்ட ஜுபரின் காலா (சிறியதாய்) மாமாவைத் தடுத்து "உஷார் அந்த கிறிஸ்து வச்சியை இங்கு அழைத்து வரலாகாது; அவளை எந்த வகையிலும் நாங்கள் வீட்டிற்குள் பிரவேசிக்க விடமாட்டோம்; இவ்விடம் பெண் பிள்ளைகளிருக்கின்றனர்; அவளுடைய கெட்ட செய்கைகளைவிட்டு இவர்களைக் காப்பாற்ற வேண்டியது அவசியமாக இருக்கிறது எனக் கூறினாள். சிறியதாயின் கடுமொழிகளைச் செவியுற்ற ஜுபரின் முகம் சிவந்து விட்டது; கண்களிலிருந்து நெருப்புப் பொறி கிளம்புவது போல் காணப்பட்டது. அவன் அதிக ஆவேசத்தோடு அன்புள்ள தாய்! யான் உங்களுக்கு மரியாதை செய்கிறேன்; ஆனால், உங்களுடைய கடும் மொழிகளானது அம்மரியாதையை முதுகிற்குப் பின் ஒதுக்கி வைத்து விடுமாறு என்னை நிர்ப்பந்தப்படுத்துகிறது; சிறப்புற்ற எனது அருமை மனைவியை தாங்கள் கேவலமாகப்பேசுவதை ஒருபொழுதும் எவ்விதத்திலும் சகித்துக்கொள்ள இயலாதவனாக இருக்கிறேன்; நீங்கள் அவளைச் சந்தித்து உள்ளே அழைத்து வரவேண்டுமென்பது எனது முழு விருப்பமாகும்; அவ்வாறின்றி, அவள் காட்டுமிராண்டிகளான பெண்டீர்களுடன் கூடியிருப்பதை விரும்பமாட்டாள்'' எனக் கூறினான்.

இவ்வாறு கூறிக்கொண்டே ஜுபர் வாசற்படியினின்று வெளியிற் சென்று விட்டான். வீட்டிற்குள்ளால் பெருங் கூக்குரல் கிளம்பி விட்டது. அந்தப் பக்கலோ "பரங்கிப்பெண்ணை, வேசகாரியை எவ்வகையிலும் வீட்டிற்குள் பிரவேசிக்க அனுமதியளிக்க மாட்டோமென'' ஷேக்சாஹிப் உறுதியுடன் கூறிக்கொண்டிருந்தார். விஷயமிருக்கும் சிக்கலான நிலைமையை

அங்கு கூடியிருந்த நண்பர்களும் உறவினர்களும் கண்டு ஷேக் சாஹிபுக்கு பலவாறான சமாதான வார்த்தைகள் கூறி, விஷயம் மீறி நடக்க வேண்டியது நடைபெற்றது; இதுபொழுது பிடிவாதஞ் செய்வது கொண்டு யாதொருபிரயோசனமுமேற்படப்போவதில்லை ஜுபர் இள வாலிபனாக இருப்பதால் கோபமடைவது கொண்டு யாது பிரயோசனமுண்டாக்கூடுமென்பதைக்கூட உணருகிறானில்லை; ஆதலால் ஒருவார காலத்திற்கு அவனையும் அவனுடைய மனைவியையும் மேல் மாடியில் வைத்துவிடுவோம்; இதற்கிடையே அவன் தனது தொழிலை ஆரம்பித்துக்கொண்டு ஊரிலுள்ள பங்களாக்களிலொன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு, அங்கு சென்றுவிடுவான், எனக் கூறிய ஆலோசனையை ஷேக் சாஹிப் ஒருவாறு ஏற்றுக்கொண்டு சம்மதியளிக்கவே, ஜுபரின் மனைவி வீட்டிற்குள்ளால் வருவதற்கு அங்குள்ள பெண் பிள்ளைகள் யாவரும் சம்மதித்துக்கொண்டனர். அங்கு கூடியிருந்தவர்கள் ஜுபருக்குப் பலவாறு கூறி அவனுடைய கோபத்தை ஒருவாறு சாந்தப்படுத்திவிட்டனர். ஐரோப்பிய அம்மாது ஆரம்பமாக அவ்வீட்டினுள் பிரவேசித்தபோது, இவள் அணிந்திருக்கும் ஆண் உடையைக் கண்டு சில பெண்கள் மறைய ஆரம்பித்தனர்; சிலர் முக்காட்டைக்கொண்டு முகத்தை மூடிக்கொண்டனர். ஜுபரோ அப்பெண்டீர்களிடம் தன் மனைவியை அறிமுகப்படுத்தி வைத்தான். அதுபொழுது குஞ்சிறிப்புடன் அவள் எல்லோருடனும் கைலாகு செய்தாள். சிலநிமிட நேரம் அவர்களுக்கிடையே சம்பாஷணை நடைபெற்றது. நமது ஜுபரோ இடையிலிருந்து மொழிபெயர்ப்புச் செய்துகொண்டிருந்தான். வீட்டிலுள்ள மாதுக்கள் அநேக பரிகாச வார்த்தைகளைப் பிரயோகித்து சிறித்துக்கொண்டிருந்தார்கள்.

இரண்டு வாரங்கள் வரை ஜுபரோ தன் ஐரோப்பிய மனைவியுடன் வீட்டின் மேல்மெத்தையில் வாசஞ்செய்து கொண்டிருந்தான். இவ்விரண்டு வாரங்களுக்கிடையே ஜுபருடைய மனைவியின் பொருட்டால் அவ்வீட்டிலேற்பட்ட மாறுதலானது பல நூற்றாண்டுகள் வரை இவ்வம்சத்தைப்பற்றி பலரும் பேசிக்கொண்டிருக்கும்படியான நிலைமையை அடைந்திருந்தது. ஒருநாளன்று அவள் ரொட்டியை சால்னாவில் துவைத்து சாப்பிட முற்பட்ட போது அதன் உறைப்பு தாங்கமுடியாது வீடு முழுவதிலும் ஜுபருக்கு முன்னிலையில் குதிக்க முற்பட்டுவிட்டாள். இவ்வாறு அவள் நமது ஷேக் சாஹிபின் வீட்டை வேடிக்கை ஸ்தலமாக ஆக்கி விட்டாள்.

இரண்டு வாரங்களுக்குப்பின் ஜுபர் ஓர் பங்களாவை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அங்கிருந்து வக்கீல் தொழில் செய்ய முற்பட்டான். பங்களாவின் வாடகை, மோட்டார் செலவு இவைகள் ஒவ்வொரு மாதமும் 300 ரூபாய் ஷேக் சாஹிப் கொடுக்கும்படி ஏற்பட்டது. ஜுபருக்கு வக்கீல் தொழிலில் போதிய வருமானம் ஏற்படாதிருக்குமாயின் அவனுக்கு மாதா மாதம் ஏற்படும் சகல செலவுகளையும் நமது ஷேக் சாஹிபே கொடுத்துத் தீர வேண்டுமென அவரின் பந்துக்கள் முடிவு செய்து விட்டனர். ஜுபரோ புத்திகூர்மையும், வாய் சாதுர்யமும், நுண்ணிய அறிவாற்றலுமுடையவனாக விருந்ததால் சில நாட்களுக்கிடையே அவனுடைய பெயர் பிரபல்யத்துக்கு வந்துவிட்டது. தொழிலும் சுமாராக நடந்து வந்தது. இந்நிலைமையில் கிரிமினல் வழக்குகள் அதிகமாக வந்தது. இத்தோரணையில், "நமது பாரிஸ்டர் ஜுபர் சாஹிப் குற்றவாளியை தூக்கு மரத்துக்குச் செல்லாது, காப்பாற்றக் கூடிய வல்லமை பொருந்தியவர்" என்னும் பெயர் எங்கும் பிரக்யாதிக்கு வந்துவிட்டது.

சிலகாலம் வரை அவனுடைய மனைவியோ சாதாரண வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கும் வரை நமது ஜுபரோ நிம்மதியோடு தொழில் நடத்துவதிலீடுபட்டுக்கொண்டிருந்தான். இம்முறையில் ஜுபரின் வகாலத்து அழகிய முறையில் நடைபெறுவதைக் கண்ட அம்மாது தினம் ஒவ்வொரு மாதிரியான புதிய புதிய உடைகளை வாங்கி வந்ததுடன் பங்களாவின் சிங்காரிப்பிலும் கவனத்தைச் செலுத்த முற்பட்டாள். ஜுபரோ அவள் மீது அதிக அன்பு பிரீதிகொண்டிருந்தானாகையால் சிறித்த முகத்தோடு அவளுடைய விருப்பத்தை நிறைவேற்றிக்கொண்டு வந்தான். இந்நிலைமையில் ஒவ்வொரு மாதத்தினுடைய வரும்படியைவிட செலவு அதிகரித்து மேலும் கடன் ஏறிக்கொண்டே போனது.

இவ்வாறு ஒரு வருடத்திற்குள் நமது ஜுபர் பெரும் கடனாளியாகி விட்டான். ஒருநாளன்று அவனுடைய மோட்டாரும் ஜப்தியாகும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. அந்த ஸ்தி

ரீயோ தன் புருஷனுடைய மானத்தையாவது அல்லது அவன் ஏழையாகி விடுவதையாவது சற்றும் பொருட்படுத்தினளில்லை. அவள் அழகிய சொகுசு பொருந்திய புதிய புதிய புடவைகளையும் உயர்ந்த மோதிரங்களையும் வாங்குவதிலேயே ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். ஜூபரோ இவ்விஷயங்களை யெல்லாம் பொறுமையோடு சகித்துக்கொண்டிருந்தான். ஆனல் அவளோ முன்னைவிட ஆடம்பரத்திலும் வீண் செலவு செய்வதிலும் அதிகம் முற்பட்டு விட்டாள். நண்பர்களுக்கு விருந்தளிக்கும் தோரணையில் ஒவ்வொரு வாரத்திலும் அநேகரை தன் பங்களாவுக்கு அழைத்து உண்ண பருகக் கொடுப்ப திலும், வீணை வாத்தியங்கள் வாசித்து காலத்தை தமாஷாகப் போக்குவதிலும் ஈடுபட்டு அநேக ரூபாய்களை விரையஞ்செய்ய முற்பட்டாள். ஜூபரோ இவைகளையும் பொறுமையோடு சகித்துக்கொண்டிருந்தான்.

அவளோ மேனாட்டு ஸ்திரீயாகையால் சுவண்டி, ஆடம்பர வாழ்க்கை இவைகளில் முழுதும் மூழ்கிப்போய் இருந்தாள். ஊரிலுள்ள வாலிப உத்தியோகஸ்தருடன் கூடிச் சேர்ந்திருக்க முற்பட்டாள். அவ்வாலிபர்களுக்கு தன் பங்களாவில் பார்ட்டி வைப்பதும் தான் அவர்களிடம் செல்வதுமாக இருந்தாள். இவள் ஆரம்பத்தில் ஜூபருடன் சேர்ந்து பார்ட்டிகளுக்குச் சென்று வந்தாளாயினும் சில நாட்களுக்குப் பின் இவ்வாறு சேர்ந்து செல்லுவதும் இவளுக்கு கஷ்டமாக, வெறுப்பாகத் தோன்றிற்று. இதனல் அவள் தனியே பார்ட்டிகளுக்கு பல புருடர்களுடன் சேர்ந்து செல்ல முற்பட்டாள். இதன் பின் வெளியில் சென்று வருவதற்கு யாதொரு தடையுமில்லை என்பதைத் தெரிந்து கொண்ட அந்த ஸ்திரீ, மாலையில் வீட்டைவிட்டு வெளியிற் சென்றுவிட்டு காலையில் வீடு திரும்பி வரும் வழக்கத்தை கைக்கொண்டாள். இதனைக் கண்ட ஜூபர் மனம் சகியாதவனகி ஒரு நாள் அன்று கோர்ட்டுக்குச் செல்லுங்கால் மெல்லிய குரலோடு அவளைக் கண்டித்தான். உடனே அவள் புலிபோல் எழும்பி, "நீர் எனது சுயேச்சையில் எவ்வகையிலும் குறுக்கிட முடியாது. யான் உம்முடைய பெண்சாதியேயன்றி வெள்ளாட்டியல்ல" வென காறிக்க முற்பட்டாள்.

அந்த ஸ்திரீ சுயேச்சையோடு, ஊரில் வசிக்கும் வாலிப உத்தியோகஸ்தர்கள், செல்வச் சீமான்களுடன் கூடியிருப்பதற்கு முற்பட்டிருக்குங்காலை, துர்அதிர்ஷ்டவசமாய் அவன் கெர்ப்பத்தைக் கலைத்து விட்டாள் என்னும் சமாச்சாரம் பிரஸ்தாபத்திற்கு வந்தது. ஜூபரோ அவளுக்குப் பரிகாரஞ் செய்வதி லீடுபட்டு பல நூற்றுக்கணக்கான ரூபாய்களை வாரி இறைத்தான். ஒருமாத காலத்திற்குள் அந்த ஸ்திரீ தெளிவுபெற்று சௌகரிய நிலையை அடைந்தாள். சுகமேற்பட்டவுடன் தான் ஐரோப்பா செல்லவேண்டுமென ஒரே மூச்சாக வாதாட தொடங்கினள். ஜூபரோ சமாதானங் கூற முற்பட்டு தன்மீது ஏற்பட்டிருக்கும் கடன்பளுவை விவரித்துக்கூறி ஏற்கனவே ஏற்பட்டிருந்த கடனுடனும் வைத்திய சிகிச்சைக்காக வாங்கிய கடனும் அதிகரித்து விட்டதென்றும் இந்நிலைமையில் ஐரோப்பாப் பிரயாணம் எந்தவகையிலும் நேர்மையாக தமக்குத் தோன்றவில்லை என்றும் எவ்வளவோ சமாதான முறையில் அறிவித்தான். புருடனின் வார்த்தைக்கு செவிமடுக்கும் குணம் அவளுக்கு எங்கிருந்து ஏற்படப்போகிறது? இந்தியாவின் இன்ப சுகங்கள்மீது அவள் வெறுப்புக் கொண்டுவிட்டதுடன் ஐரோப்பாவின் ஆடம்பர வாழ்க்கைகளின் மீது ஆசைகொண்டுவிட்டாள். இதனல் கூடியசீக்கிரம் இந்தியாவை விட்டுவிட வேண்டுமென்னும் தீர்மானத்திற்கு வந்துவிட்டாள். ஜூபரோ எவ்வளவோ சமாதான வார்த்தைகள் கூறியும் யாதொரு பிரயோசனமுமேற்படவில்லை. கடைசியாக அழுத கண்ணீரோடும் சமாதானம் கூறிப்பார்த்தான். இவனுடைய எந்த சமாதானத்தையும் அவள் ஏற்றுக்கொள்ளுபவளா யில்லை. அவளுடைய வற்புறுத்தல் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரிக்கவே ஜூபரோ ஒன்றும் இயலாதவனக அதிகவட்டிக்குக் கடன் வாங்கி அவளை ஐரோப்பாவிற்கு அனுப்பி வைத்தான். அவள் சென்ற சில காலத்திற்கெல்லாம் அவ் வூரிலுள்ள உத்தியோகஸ்தனை ஓர் அதிகாரியும் ஐரோப்பாவிற்குப் புறப்பட்டுச் சென்றான். இவனுடன் அந்த ஸ்திரீ அதிகம் நெருங்கிப் பழகிக்கொண்டிருந்தாள்.

(தொடரும்)

218963

# ஞானாந்தம்

இஃது ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம் கஸ்ஸாலீ (றஹ்) அவர்களால் எழுதப்பட்ட "இஹ்யாஉ உலூமித்தீன்" என்னும் அறபிக்கிரந்தத்தின் கிதாபுத்தவ்ஹீத் வத்தவக்குல் என்ற பகுதியின் தமிழ் மொழிபெயர்ப்பு. இஸ்லாம் மதத்தின் அத்வைதக் கொள்கையை தெள்ளத் தெளிய விளக்குகிறது. இதனுடன் பெயர்பெற்ற பாரசீகப் பெரியாரான ஸஅதீ ஷீராஸீ (றஹ்.) அவர்களால் எழுதப்பட்ட போஸ்தான் என்னும் காவியத்திலிருந்து ஒரு பகுதி மொழிபெயர்த்து அசல் பார்ஸீ செய்யுட்களுடன் இணைக்கப் பெற்றிருக்கிறது.

சென்னை "ஸைபுல் இஸ்லாம்" பத்திராதிபர் ஆலீ ஜனாப் மௌலானா மௌலவி S. S. அஹ்மது ஸயீத் சாகிப் பாக்கவி, கூத்தாநல்லூர் மத்ரஸா மன்பஉல் உலாவின் நாஜிரும், சென்னை, ஹிபாஜத்துல் இஸலாம் சங்கக் காரியதரிசியுமான ஆலீ ஜனாப் அல்ஹாஜ் மௌலவி ச. அ. முஹம்மது அலிசாகிப் பாக்கவி, சென்னை "ஹிபாஜத்துல் இஸ்லாம்" பத்திராதிபர் ஆலீ ஜனாப் அல்ஹாஜ் மௌலானா மௌலவி A. R. அப்துர் ரஹீம் சாகிப் பாக்கவி, சென்னை, ஆலீ ஜனாப் S. முஹம்மது கமாலுத்தீன், B.A , B.L., உத்தமபாளையம் அல்ஹாஜ், மௌலானா மௌலவி S. S. முஹம்மது அப்துல் காதிர் சாகிப் பாக்கவி ஆகிய கனவான்களின் வாழ்த்துரை, மதிப்புரை, கணிப்புரை, போற்றுரைகளும் சேர்ந்தது.

இஃது, பிரபல மார்க்கோபதேசியான திண்டுக்கல் மௌலானா மௌலவி அபுல் பயான் M. முஹம்மது மியான் சாகிப் பாக்கவி அவர்களால் தமிழில் எழுதப்பட்டது. படிக்கப் படிக்கப் பேரானந்தம் விளைவிக்கும் பல அரிய விஷயங்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. கிரௌன் 1/8 சைஸ் 80 பக்கங்களுள்ளது. கிளேஸ் காகிதம் இதன் விலை அணா 6.

தனிப்பிரதி வேண்டுவோர் 8 அணா அனுப்பி புக்போஸ்ட் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

கிடைக்குமிடம்:—**M. முஹம்மது மியான் & கோ.,**

சிகார் பாக்டரீ,

உறையூர், திருச்சி.

# சந்தா நேயர்கட்கு

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தா ரூபாயை வருட ஆரம்பத்தில் கொடுத்துவரும் மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டியது முக்கியமாக இருக்க, அநேகர் சென்ற வருடங்களின் பழைய பாக்கிகளை அனுப்பிக் கொடுக்காமலே இருக்கின்றனர். நமது மாசிகைக்கு ஏற்பட்டுள்ள சந்தா ரூபாய் வெகு சொற்பமாகையால் இதற்காக அடிக்கடி தபால் எழுதுவது கொண்டு வீண் செலவேற்படுகிறது. ஆதலால், அன்பர்கள் தங்கள் பாக்கிகளையும், புதிய ஆண்டுக்குரிய சந்தா ரூபாயையும் உடனே அனுப்பி வைக்குமாறு கோருகிறோம்.

**சிலோன் சந்தா நேயர்கள் :**—சிலோன் பகுதிகளுக்கு வி. பி. அனுப்புவதானால் அதிகமான வீண் செலவேற்படுகிறது. சந்தா நேயர்கள் அதிகமான ரூபாய் கொடுத்து வி. பி. பெற்றுக் கொள்ளும்படி நேரிடுகிறது. ஆகவே, கொழும்பு, கண்டி, மாத்தளை, நீர்கொழும்பு, கம்பளை முதலிய இடங்களிலுள்ளவர்கள் தங்கள் பாக்கிகளை நமது ஏஜண்டு ஜனாப் **A.M.K.** ஆலிம் சாஹிப் (**144**, கைசர் ஸ்டீட், கொழும்பு) இடம் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ளும்படி கோருகிறோம்.

பர்மா :—ரெங்கூன், மாந்தலே முதலிய பர்மா பகுதிகளுக்கு தபால் கட்டணம் அதிகமாய்விட்டதால் ஒவ்வொரு சந்தாதாருக்கும் தனித்தனியே தபால் எழுதுவது கொண்டு அதிகச் செலவேற்படுகிறது. ஆகவே, அவ்விடங்களிலுள்ள சந்தா நேயர்கள் சென்றவருட பாக்கியையும் நடைபெறும் இவ்வருடத்திற்குரியவைகளையும் உடனே அனுப்பிவைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

பினாங் :—இவ்விடமுள்ளவர்கள் தங்கள் பாக்கியை அவ்விடம் ஜனாப் N. K முகம்மது கௌஸ் சாஹிப் (127. Pitt Street. Penang) அவர்களிடம் கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கோருகிறோம்.

மலாயா :—இவ்விடங்களிலுள்ளவர்கள் தங்கள் பாக்கிகளை கிள்ளான் ஆலீ ஜனாப் அல்ஹாஜ் **K. A.** பகீர் முகம்மது சாஹிப் அவர்களிடம் நேரில்கொடுத்தோ, தபால் மூலம் அனுப்பியோ ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கோருகிறோம்.

சிங்கை :—இவ்விடத்திய சந்தாநேயர்கள் சென்ற வருடத்திற்குரிய தங்கள் சந்தா பாக்கியையும், புதிய வருடத்திற்குரிய சந்தாவையும், ஜனாப் **L. A.** முகம்மதுயாஸீன் அவர்கள் (249, தஞ்சாங்பகர்ரோட், சிங்கை) இடம் கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கோருகிறோம்.

மானேஜர்.

Printed by V. Sundram Iyer at the Kesari Printing Works, 150, Anna Pillai St., Madras
Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islai
43, Post Office St., G. T. Madras.